# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

**AYIDHA EZHUTHU**

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNISED JOURNAL

UGC NO : 42330 / IMPACT FACTOR : 4.118

அக்டோபர் – 2019



visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

பல்லவி பதிப்பகம்

ISSN : 2278-7550

2278-7550

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

**ISSN : 2278-7550**

UGC - பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

**UGC RECOGNISED JOURNAL**

UGC NO : 42330 / IMPACT FACTOR : 4.118

மலர் : 7 அக்டோபர்-2019 இதழ் : 10



**பதிப்பாசிரியர்**

**நல் நடராசன்**

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**பல்லவி பதிப்பகம்**

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



**EDITORIAL BOARD**

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gamil.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gamil.com

**Dr.B.Sathiyamoorthy**
*Madurai Kamaraj University, Madurai.*
tamilkanikani@gamil.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gamil.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gamil.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gamil.com

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gamil.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gamil.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*
tamilkanikani@gamil.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gamil.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gamil.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை.*
arangantnou@gamil.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavur.*
skavithatamil@gamil.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus, Director, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

## ADVISORY BOARD

**M.Senthilkumar**
*Periyar University, Salem.*
senthiltamilnesan@gamil.com

**Dr.V.S.Sreenivasan**
*Nandha Arts and Science College, Erode.*
srivc2345@gmail.com

**Dr.T.K.Anuradha**
*Trinity College For Women, Namakkal.*
anukeerthigan@gmail.com

**Dr.R.Vijyarani**
*Beshap Heeper College, Tirucherappalli.*
vejheya.rani@gamil.com

**Dr.R.Nirmala Devi**
*Vellalar Womens College, Erode.*
prnirmaladevi@gmail.com

**Dr.K.Gayathiri**
*Government Arts College, C.Mutlur, Chidambaram.*

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gamil.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**R.F.அரூஸ்**
*ராபா பன்னாட்டு வளாகம்,*
இயக்குனர், *இலங்கை.*
raapa.arooz@gmail.com

## ஆலோசனைக் குழு

**ம.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.*
senthiltamilnesan@gamil.com

**முனைவர் வெ.ச.சீனிவாசன்**
*நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.*
srivc2345@gmail.com

**முனைவர் தா.க.அனுராதா**
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*
anukeerthigan@gmail.com

**முனைவர் இரா.விஜயராணி**
*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*
vejheya.rani@gamil.com

**முனைவர் நிர்மலா தேவி**
*வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.*
prnirmaladevi@gmail.com

**முனைவர் க.காயத்ரி**
*அரசு கலைக்கல்லூரி, சி.முட்லூர், சிதம்பரம்.*

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** - தமிழியல் ஆய்வுக்கான ஒரு புதியகளம். இவ்விதழ் 2013 ஆம் ஆண்டு முதல் காலாண்டு இதழாக வெளிவந்தது. 2018 இல் இருந்து மாத இதழாக வெளிவருகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல் இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. **பொருள்** : சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

2. **அளவு** : MSWord இல் A4 அளவில், 1.5 வாக்கிய இடைவெளியில் (Lining Space), பாமினி (Bamini Font) - 12 புள்ளி எழுத்தளவில், மூன்று முதல் ஐந்து பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

3. **முகவரி** : கட்டுரைத் தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரைமுடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெறவேண்டும்.

4. **கட்டுரை அனுப்பும் முறை** : கட்டுரையை ayidhaezhuthu@gmail.com (Or) pallavipublications@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

5. **சந்தா** : தனி இதழ் விலை ரூ.350/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 12 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | - | ரூ. 3000/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம், கல்வி நிறுவனங்கள்) | - | ரூ. 3600/- |

6. **கட்டணம் செலுத்தும் முறை** : உறுப்பினர் (சந்தா) கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக (**DD**) ஈரோட்டில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் (**PAYABLE AT ERODE**) அனுப்பலாம். இணையவழி, (**NET BANKING**), அலைபேசி (**MOBILE BANKING**) வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம்.

**A/C Name: PALLAVI PATHIPPAKAM.**
**A/C Type : CA,**
**A/C No : 33679969977.**
**Bank : STATE BANK OF INDIA,**
**Sathy Road, Erode -638 011.**
**IFSC : SBIN0016100.**


**பல்லவி பதிப்பகம்**
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**


**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையத்தளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

**அல்லது**

**https://ayidhaezhuthu.in** என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். அவ்வாறே தங்களது ஆய்வுக்கட்டுரைகளை இந்த இணையத்தளத்தின் வழியாக அனுப்பலாம்.

# பொருளடக்கம்


1. ஜெயகாந்தன் சிறுகதைகளில் எளியோர் வாழ்நிலை

***முனைவர் இரா.இளவரசு** - 1

2. பொருநராற்றுப்படையில் பொருநர் வாழ்வியல்

***முனைவர் த.சந்திரகுமார்** - 4

3. 'பூவை' சிறுகதையில் அடிமைச் சமூகம் உருவாக்கப்படுதல்

***முனைவர் ப.அன்பரசி** - 7

4. கண்ணதாசனின் திரையிசைப் பாடல்களில் தத்துவக் கோட்பாடுகள்

***திருமதி.கோ.புவனேஸ்வரி** - 10

5. தமிழ் இலக்கியங்களில் திருச்செங்கோடும் அர்த்த நாரீசுவரர் வழிபாடும்

***முனைவர் சி.அ.தி.சங்கரகோமதி** - 13

6. குறுந்தொகையில் வாழ்வியல் கூறுகள்

***த.தேவகி** - 16

7. ஆற்றுப்படையில் முல்லை நில வாழ்வியல்

***முனைவர் ம.சந்திரசேகரன்** - 18

8. புறநானூற்றில் வாழ்வியல்சிந்தனைகள்

***டே.எட்வின் சார்லஸ்** - 22

9. கவிஞர் வைரமுத்துவின் திரைப்பாடல்களில் சித்த மருத்துவம்

***பேராசிரியர்.க.நீ.இளங்கோவன்** - 25

10. சங்க இலக்கியங்களில் நாட்டுப்புறமருத்துவ செய்திகள்

***திருமதி.கு.கௌசல்யா** - 28

11. மலைபடுகடாமில் கானவர் வாழ்வியல் சிந்தனைகள்

***அ.கிரேஸி ஜெனோவா** - 31

12. சங்க அக இலக்கியங்களில் அழகியல்

***க.செ.ஜெயலட்சுமி** - 34

13. வாழ்வியல் பரிமாணங்கள்

***முனைவர் போ.கார்த்திகா** - 37

# ஜெயகாந்தன் சிறுகதைகளில் எளியோர் வாழ்நிலை

***முனைவர் இரா.இளவரசு,** தலைவர், தமிழ்த்துறை மற்றும் தமிழ் உயராய்வு மையம், அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

**முன்னுரை**

இலக்கியங்கள் சமுதாய நிகழ்வுகளிலிருந்தே படைப்பாக்கம் பெறுகின்றன. அவ்இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட மாந்தர்களும் அவர்களது வாழ்க்கைச் சிக்கல்களும் சமுதாயத்தைப் பிரதிபலிப்பனவாகவே அமைவதைக் காணலாம். அவ்வகையில் ஜெயகாந்தன் தனது சிறுகதைகளில் எளியோர் வாழ்நிலையை உண்மைக்கு மிக நெருக்கமாகப் பதிவு செய்துள்ளார் என்பதை நிறுவுவதாக இவ்ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

**எளியோர்**

பெண்கள், குழந்தைகள், மலைவாழ் மக்கள், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், சமுதாயத்தில் கீழ்நிலையில் உள்ளவர்கள் ஆகியோர் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களாக வாழ்கின்றனர். இவர்களை எளியோர் எனலாம். இவ் எளிய மக்கள் தங்களது வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் அதிகம். வாழ்க்கையே போராட்டமாக உள்ளது. அப்போராட்ட வாழ்க்கையை வாழும் "விளிம்புநிலைச் சாதியைச் சார்ந்தவர்கள் அரசியல், வரலாறு, கல்வி, பண்பாடு என அனைவராலும் புறக்கணிக்கபட்டவர்களாக நான்காம், ஐந்தாம் தரமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்" (கே.பழநிவேலு, கோட்பாட்டியல் திறனாய்வுகள், ப.51) என்பர். ஜெயகாந்தனின் சிறுகதைகள் இத்தகைய மக்களது வாழ்க்கை நிலையை பிரதிபலிப்பனவாக உள்ளன.

**அடிப்படை வசதியற்ற வாழ்வு**

மனிதன் மனிதனாக வாழ்வதற்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம், சுகாதாரமான வாழ்வு, நல்ல கல்வி முறை ஆகியவை அவனுக்குரிய அடிப்படை வசதிகளாகும். சாலையோரத்தை வாழ்விடமாகக் கொண்ட மக்கள் இவை அனைத்தையும் இழந்தவர்களாக உள்ளனர். ஜெயகாந்தனின் 'ஒரு பிடி சோறு' புதினத்தில் வாழ்வதற்கு இருப்பிடமற்ற மக்கள் சாலையின் ஓரங்களைத் தங்களது வாழ்விடமாகக் கொண்டு வாழ்கின்றனர். சாலையோரத்தில் கிழிந்த பழைய துணி, சாக்கு, பாய் போன்ற எதையேனும் மேற்கூரையாகக் கொண்டு வீடு அமைத்து வாழ்ந்து வந்ததை,

"கோணி + கந்தல் பாய் + மூங்கில்தட்டி + சினிமா போஸ்டர் = ஒரு கூரை! அந்தக் 'கோழிப்புறை'யில் நீட்டிப் படுத்திருந்த ராசாத்தியின் அடிவயிற்றுக்குள் என்னவோ 'சுருக்'கென்று குத்தி வாங்கியது (ஜெயகாந்தன், ஜெயகாந்தன் சிறுகதைகள். ப.205)

"அந்தக் குடிசையில் நிற்க முடியாது. ராசாத்தி நல்ல உயரம் என்பது மட்டுமல்ல, குடிசையும் ரொம்பத் தாழ்ந்தது தானே?" (ஜெயகாந்தன், ஜெயகாந்தன் சிறுகதைகள். ப.207)

என்ற கதைப்பகுதி புலப்படுத்துகின்றது.

சாலையோர மக்கள் வயிற்றுப் பசியின் போது உணவு கிடைக்காது வருந்தும் நிலையில் உள்ளனர். ராசாத்தி கர்ப்பிணிப் பெண். இரண்டு நாட்கள் உணவில்லாது, உணவு கிடைக்காது பசியினால் துன்பப்படுகின்றாள். உணவிற்காக ஏங்கி உணவுப் பாத்திரங்களை அவள் பார்ப்பதை,

"கொஞ்சமா? - ஹ்ம்... கஞ்சியெக் கண்டு ரெண்டு நாளாச்சு, ஒரு பானை கஞ்சி இருந்தாலும் நெட்டலாம்' - அவள் கண்கள் மூலையில் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த மூளிப்பானையை நோக்கின. பக்கத்தில் ஓட்டையான அரிசிப் பானை உருண்டு கிடந்தது. பசி வயிற்றை மென்றது"

(ஜெயகாந்தன், ஜெயகாந்தன் சிறுகதைகள். ப.206)

என்ற கதைப்பகுதி புலப்படுத்துகின்றது.

அரிசி கிடைத்து அதனைக் கொண்டு ராசாத்தி உணவு தயாரிக்க முயல்கின்றாள். அதற்குத் தண்ணீர் பிடிக்கச் செல்கின்றாள். அப்பொழுது தண்ணீர் பானை நிறையத் தண்ணீர் பிடிக்கும் அளவிற்கு அவளது பசி தாங்காது என்பதால் பாதி அளவு தண்ணீர் பிடித்து வந்து உணவு தயாரிக்கின்றாள். அடுப்பில் நெருப்பு எரியவில்லை என்பதால் குனிந்து, ஊதி,

நெருப்பினை உண்டாக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அதற்கும் இயலாத நிலை; ஆனால் முயற்சி செய்து உணவு தயாரிக்கின்றாள். இதனை,
“ஒரு பானை வேணாம்… பாதி நெறைஞ்சா போதும்!” என்றாள் ராசாத்தி.
- அவள் பசிக்கு அவ்வளவு நேரம் காத்திருக்க முடியாது என்பது மட்டுமல்ல; அவள் வலிக்கு ஒரு பானை தண்ணீரைச் சுமக்கவும் முடியாது அல்லவா?” (ஜெயகாந்தன், ஜெயகாந்தன் சிறுகதைகள். ப.208)
“அடுப்பின் மீது பானையை வைத்துச் சுள்ளிகளைப் பற்ற வைத்தாள். அடுப்பு புகைந்தது… கண்ணெல்லாம் எரிச்சல்…
‘குனிஞ்சி ஊதினா தீப் புடிச்சிக்கும்…’
ஊஹூம்… அவளால் குனிய முடியவில்லை!
அப்புறம் கஞ்சி…?

வயிறு பூமியில் படாமல் ஒரு காலை மண்டியிட்டு ஊன்றி ஒரு கையைத் தரையில் தாங்கிக் கொண்டு ஒரு மூச்சு இழுத்து ஊதினாள். ‘பக்’கென்று அடுப்பில் தீ சுழன்று எரிந்தது; ஒரு கணம் அவள் தலையும் சுழன்றது” (ஜெயகாந்தன், ஜெயகாந்தன் சிறுகதைகள். ப.209)
என்ற கதைப்பகுதி விவரிக்கின்றது.

இம்மக்கள் முறையான வாழ்க்கை வாழாதவர்களாகவும் உள்ளனர். திருமணம் முடிக்காமல் குழந்தை பெறும் நிலையும் திருமணமான பெண்கள் குடும்ப எல்லையைத் தாண்டிச் செல்லும் நிலையும் இம்மக்களிடையே இருந்துள்ளது. ராசாத்திக்குத் தான் பெற்ற குழந்தைகளுக்கு தந்தை யார் என்று தெரியாத நிலையில் உள்ளாள். இம்மக்களது தொழில் விறகு இறக்குதல் கூலி வேலைக்குச் செல்லுதல் ஆகியவையாக உள்ளது. இவ்வேலை கிடைக்காத காலங்களில் தவறான தொழில் செய்பவர்களாகவும் இம்மக்கள் இருந்துள்ளனர். இதனை,

“ராசாத்திக்கோ, மாரியாயிக்கோ விபசாரம் என்பது தொழிலல்ல; அவர்கள் வாழும் பிளாட்பாரத்தின் எதிர்ப்புறத்திலிருக்கும் விறகுக்கடையில் விறகு சுமந்து செல்வது, லாரியில் வரும் விறகுக்கட்டைகளை இறக்கிக் கடைக்குள் அடுக்குவது - இவைதான் பிரதான தொழில். அந்த வேலைகள் இல்லாத சமயத்தில் வேறு ஏதாவது கூலி வேலை. அதுவும் இல்லாத சமயத்தில், மிகவும் வறட்சி ஏற்பட்டு நல்ல கிராக்கியும் ‘சான்ஸு’ம் அடித்தால்… வேறு ‘ஏதாவது’… (ஜெயகாந்தன், ஜெயகாந்தன் சிறுகதைகள். ப.205)
என்ற கதைப்பகுதி விவரிக்கின்றது.

**“அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்**
**மறவாது இதுகேள்! மன்னுயிக் கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்டதில்”**

**(மணிமேகலை, ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை, 228)**

என்ற மணிமேகலையின் கூற்றுக்கு மாறாக சாலையோரங்களை வசிப்பிடங்களாகக் கொண்ட மக்களது வாழ்க்கையில் உணவு, உடை, இருப்பிடம் எதுவும் கிடைக்காது உள்ளது.

**நோயாளியின் வாழ்க்கை**

மனிதன் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு ஆரோக்கியமான உடல்நிலையும், அன்பான உறவுகளும் நல்ல பொருளும் இருத்தல் வேண்டும். ‘நான் இருக்கிறேன்’ சிறுகதையில் நோயாளிப் பிச்சைக்காரன் ஒருவனுக்கு உறவுகள் இல்லை. பொருள் இல்லை. உடலிலும் நோய். சத்திரத்தில் வாழ்கின்றான். இரவில் உணவினை இரவல் பெற்று வந்து உண்பவனாக இருக்கின்றான். இதனை,

“அவன் பகலில் பிச்சைக்குப் பொவதில்லை. இருட்டிய பிறகு யார் கண்ணிலும் படாமல் தலையில் முக்காடிட்டுக் கொண்டுதான் போவான். மூன்று வேளைக்கும் முதல் நாளிரவு ஒரு வேளை எடுத்த பிச்சைதான். சில நாட்களில் அதுவே அதிகமாகி அடுத்த நாளைக்கும் இருந்து விடுவது உண்டு” (ஜெயகாந்தன், ஜெயகாந்தன் சிறுகதைகள். ப.800)

என்ற கதைப்பகுதி தெளிவிக்கின்றது. அவன் பிச்சையெடுக்கச் செல்லும் பொழுது அவனது தோற்றத்தைப் பார்த்து ஒரு பெண் அருவருப்படைகின்றாள். அவளின் பின் வந்த ஆடவன் பிச்சைக்காரனை ஏளனமாகப் பேசுகின்றான். இதனை எண்ணி பிச்சைக்காரன் வருந்துகின்றான். இதனை.

“அன்னக்கி ஒரு நாளு, ஒரு வீட்டுக்கு முன்னாடி போயி ‘அம்மா தாயே! பசிக்குது’ன்னு நின்னப்ப சாப்பிட்டுட்டு எச்சில் இலை கொண்டு வந்து வெளியே போட்ட ஒரு பொண்ணு என்னைப் பாத்துட்டு வாந்திவர்ர மாதிரி குமட்டிக்கிட்டு உள்ளே ஓடினப்புறம் ஒரு ஆளு வந்து எட்டிப் பாத்துட்டு சொன்னானே… ‘அம்மா, வெளியே ஒரு தரித்திரம் வந்து நிக்குது, ஏதாவது போட்டு அனுப்பு. இவனெல்லாம் ஏன் தான் உசிரை வெச்சிக்கிட்டு இருக்கானோ, இந்தத் தீராத நோயோடே’ன்னு…” (ஜெயகாந்தன், ஜெயகாந்தன் சிறுகதைகள். ப.800)

என்ற கூற்று விவரிக்கின்றது. அவனைப் பார்க்கும் மற்ற மனிதர்கள் அவனைப் பார்த்து வெறுப்படைகின்றனர். இதனை அறிந்து வியாதிக்காரன் வருந்துகின்றான். இதனை,

"உலகம் எவ்வளது அழகாயிருக்கு! இதைப் பார்க்கற எம்மனசு சந்தோஷப்படுது. ஆமா, எல்லாப் பொருளும் பார்த்தவங்க மனசை சந்தோஷப்பட வைக்கும்போது நான்... நான்? என்னைப் பார்த்தவுடனே ஒவ்வொருத்தர் முகத்திலேயும் ஏற்படற மாற்றம் இருக்கே, வியாதியாலே மரத்துப்போன என் உடம்புக்குத் தெரியாத வேதனை, பாவம்! அவங்க மனசுக்குத் தெரியுது" (ஜெயகாந்தன், ஜெயகாந்தன் சிறுகதைகள். ப.799)

என்ற கூற்று குறிப்பிடுகின்றது.

பெற்றோர் கவனக் குறைவால் ஒரு குழந்தை புகைவண்டியில் சிக்கும் சூழல் ஏற்படுகின்றது. இதனால் நோயாளிப் பிச்சைக்காரன் குழந்தையைக் காப்பாற்றுகின்றான். அவனுக்கு குழந்தையைத் தூக்கும் ஆசையும் வருகின்றது. அதனால் குழந்தையைத் தூக்குகின்றான். குழந்தையைத் தூக்கியதை அறிந்த பெற்றோர் அவனை அடிக்க முயல்கின்றனர். பின்பு முழுவிவரமும் அறிந்தும் அவனுக்கு நன்றி சொல்லாது தங்களைக் கூப்பிடவில்லையே என்று கூறுகின்றனர். இதனை எண்ணி வாழ்க்கையில் எதையும் அநுபவிக்காமல் வருந்துவதை,

"மனுசனாப் பொறந்தும், மனுசனுக்குள்ள எந்தச் சொகத்தையும் எந்த உரிமையையும் அநுபவிக்க முடியாம நான் வாழறேனே... ஒரு பிசாசு மாதிரி தனியா குந்திக்கிட்டு. வாழறதா நெனச்சி என்னையே ஏமாத்திக்கிறேனே"

என்ற கூற்று விவரிக்கின்றது.

**மாற்றுத்திறனாளி**

தனது தேவையை நிறைவு செய்வதாற்கான வல்லமை அனைவருக்கும் உண்டு. ஆனால் உடலில் குறைபாடுடையவர்களிடம் ஏதேனும் ஒரு தனித்திறமை இருக்கும். ஆதலால் அவர்களை மாற்றுத்திறனாளி என்பர். 'நான் இருக்கிறேன்' சிறுகதையில் வரும் மாற்றுத்திறனாளி கால் சரியாக இல்லாதவன். கால் சரியில்லை என்பதனால் அவனது தாய் அவனுக்கு வைத்தியம் பார்க்கின்றாள். அதனால் தாய்க்கும் அவனது சகோதரனுக்கும் இடையே சண்டை ஏற்படுகின்றது. இதனால் மாற்றுத்திறனாளி,

"நான்தான் சொல்றேனே, எனக்குக் காலில்லாம மத்தவங்களுக்கு நான் பாரமா இருக்கேனே! எங்கம்மா வைத்தியனுக்குன்னு தம்பியைப் பணம் கேட்கறப்போ அவங்க ரெண்டு பேருக்கும் என்னாலே எவ்வளவு சண்டை! எவ்வளவு வருத்தம்" (ஜெயகாந்தன், ஜெயகாந்தன் சிறுகதைகள். ப.810)

என்று வருந்துகின்றான். பேருந்தில் தாயுடன் பயணம் செய்யும் பொழுது பெண்கள் இருக்கையில் மாற்றுத்திறனாளி அமரவேண்டிய சூழல் ஏற்படுகின்றது. அங்கு வந்த பெண் தனக்கான இடத்தில் அமர முயல மாற்றுத்திறனாளி இருக்கையிலிருந்து எழுந்திருக்கிறான். அவனால் நிற்க இயலாது தடுமாறுகின்றான். அவனது தாய் தனது மகனது இயலாமையை,

"ஐயா!... ஐயா!" என்ற தாயின் பரிதாபமான குரல் கண்டக்டரையும், அந்தப் பெண்ணையும் பஸ்ஸிலுள்ள அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. இன்னொருவர் சொல்லித் தன் காதால் கேட்கப்பெறாத அந்த வார்த்தையை அவளே சொல்ல வெண்டிய நிர்ப்பந்தம்... "ஐயா அவன் நொண்டி ஐயா! நிற்க முடியாதையா..." (ஜெயகாந்தன், ஜெயகாந்தன் சிறுகதைகள். ப.809)

என்று கூறுகின்றாள். இதனால் அப்பெண் இவனுக்கு இடம் கொடுக்கின்றாள். அங்கு அமர்ந்தவன் தனது இயலாமையை எண்ணி வருந்துகின்றான். தான் மாற்றத்திறனாளி என்பதை எண்ணி வருந்தி புகைவண்டியில் விழுந்து இறக்க முற்படுகின்றான்.

**முடிவுரை**

**"காணார் கேளார் கால் முடப்பட்டோர்**
**பேணுநர் இல்லோர்பிணி நடுக்குற்றோர்**
**யாவரும் வருகவென்று இசைத்துடன் ஊட்டி"**

**(மணிமேகலை, ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை, 111-113)**

என்று ஆபுத்திரன் மக்களுக்கு உணவு வழங்கி உதவி செய்ததாக மணிமேகலை கூறுகின்றது. எக்காலத்திலும் உதவி பெறும் நிலையில் இம்மக்கள் உள்ளதை மணிமேகலை எடுத்துரைக்கின்றது. ஆனால் பல இடங்களில் இதே நிலையில் இருக்கும் மக்கள் உணவு, உடை, இருப்பிடம், பாதுகாப்பான சூழல் ஆகியவை இல்லாது துன்பப்படுவதை ஜெயகாந்தன் தனது சிறுகதைகளில் மிகத் துள்ளியமாகச் சித்திரித்துள்ளார் எனலாம்.

# பொருநராற்றுப்படையில் பொருநர் வாழ்வியல்

***முனைவர் த.சந்திரகுமார்,** உதவிப்பேராசிரியர், இளங்கலைத் தமிழ்த்துறை மற்றும் தமிழ் உயராய்வு மையம், அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

**முன்னுரை**

பழங்காலத் தமிழர்களின் வாழ்க்கை முறைகளைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. சங்க இலக்கியம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என இருவகைப்படும். பத்துப்பாட்டு நூல்களில் இரண்டாவதாக இடம் பெறுவது பொருநராற்றுப்படை ஆகும். சோழன் கரிகால் பெருவளத்தானிடம் பரிசில் பெற்றுத் திரும்பும் பொருநன், பரிசில் பெறாத பொருநனை அவ்வள்ளலிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. இதனை இயற்றியவர் முடத்தாமக்கண்ணியார் ஆவார். மனித வாழ்க்கைக்கு அடிப்படைத்தேவையாக விளங்கும் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு வாழ்வதே வாழ்வியல் ஆகும். அவ்வகையில் ஆற்றுப்படை நூல்களில் சிறந்து விளங்கும் பொருநராற்றுப்படையில் இடம் பெறும் பொருநர்களின் வாழ்வியல் செய்திகளை ஆராய்வதே இவ்ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

**உணவு**

மனிதன் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத ஒன்று உணவுதான்.

**"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்**
**சேராது இயல்வது நாடு"** (குறள். 734)

என்பார் வள்ளுவர் பெருந்தகை. நாட்டில் வாழக்கூடியவர்கள் அனைவரும் பசி நீங்கி வாழ்வதற்கேற்ற குறையாத உணவுகளை உடைய நாடே சிறந்த நாடாகும். செல்வம் சிறந்து விளங்கக்கூடிய சோழநாட்டிலும் உணவின்றி திரிந்து வாழக்கூடிய எளியவர்களும் வாழ்ந்தார்கள். நற்குடிப் பிறப்பினையும், நல்லொழுக்கத்தினால் பெறும் சிறப்பினையும், பழிபாவங்களுக்கு அஞ்சக்கூடிய நாணத்தையும் அழிப்பது பசியாகும். அதனால் தான் பசிவந்தால் பத்தும் பறந்து போகும் என்பார்கள்

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்பதற்கேற்ப சோழன் கரிகாலன் வறியவர்களுக்கு உணவு கொடுத்து பசிப்பிணியை நாட்டை விட்டே விரட்டினான்.

**"அறாஅ யாணர் அகன்தலைப் பேரூர்**
**சாறுகழி வழிநாள் சோறுநசை உறாது**
**வேறுபுலம் முன்னிய விரகு அறி பொருந"** (பொருந. 1-3)

என்ற பாடலடிகள் மூலம் பொருநராற்றுப்படையில் இடம் பெறும் திருவிழாக்கள் நடக்கும் ஊர்களில் கிடைத்த உணவை உண்பர். மேலும், அடுத்தநாள் கிடைக்கும் அந்த உணவை விரும்பாமல், புதிதாக விழா நடக்கும் ஊருக்குச் சென்று புதிய உணவை உண்ணும் இயல்பை உடையவர்கள் பொருநர்கள். பின்னர் தம் வறுமையை நீக்கும் வள்ளலை நாடிச்செல்வர். பழுத்த பழங்களை உடைய மரத்தைத் தேடிச்செல்லும் பறவைகள் போன்று பொருநர்கள் வள்ளல்களை நோக்கிச் செல்வர். இதன்மூலம் பொருநர்கள் புதிய உணவின் மீது விருப்பம் உடையவர்கள் என்பதை அறியமுடிகிறது. மேலும், பொருநன் திருவிழாக் காலங்களில் பாடல்கள் பாடி மக்களிடம் பெறும் உணவு தன் வறுமையைப் போக்காது என்பதால் வள்ளலை நாடிச் செல்வதை விருப்பமாகக் கொண்டிருக்கலாம் என்பதையும் ஆய்ந்து உணர முடிகிறது. சங்ககால மக்கள் சமையற்கலையிலும் தலைசிறந்து விளங்கியுள்ளனர். அசைவ உணவைத் தவிர சைவ உணவு வகைகளையும் சமைக்கக் கற்றிருந்தனர். முழுமையான நீண்ட அரிசியைக் கொண்டு வேக வைத்த சோற்றைக் குழைத்திடாமல் சமைக்கும் பக்குவத்தையும் அறிந்திருந்தனர். சோழன் கரிகாலன் ஒருநாள் பொருநர்களுக்கு அரிசி உணவு உண்க என்று கூறி, வரியும் முரியும் இல்லாத வளமான

அரிசியால் சமைத்த விரல் போன்று நிமிர்ந்த உணவையும், பருக்கைக் கற்கள் போன்று நன்கு பொரிக்கப்பட்ட பொரிக்கறியையும் தந்து உண்ணச் செய்தான்.

**"முரவை போகிய முரியா அரிசி**
**விரல் என நிமிர்ந்த நிரல் அமைபுழுக்கல்**
**பரல் வறைக் கருனை, காடியின் மிதப்ப" (பொருந. 113 - 115)**

என்ற அடிகளின் மூலம் நீண்ட விரல் போன்ற ஒரே அளவான அரிசியைப் பயன்படுத்தி உணவு சமைத்தார்கள் என்பதை அறியலாம். சங்ககால மக்கள் காலத்திலிருந்து இன்று வரை தாம் உணவினை உண்பதற்கு முன்பாக காக்கைக்கு உணவிடும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். பொருநராற்றுப்படையிலும் காகத்திற்கு உணவு வைக்கும் பழக்கம் காணப்படுகிறது. இவ்வுணவினை நம் முன்னோர்கள் காகம் வடிவில் வந்து உண்பதாக மக்கள் நம்புகின்றனர்.

**"தாழ்தாழைத் தண் தண்டலைக்**
**கூடுகெழீஇய குடிவயினான்**
**செஞ்சோற்ற பலி மாந்திய**
**கருங்காக்கை கவவு முனையின்" (பொருந. 181-184)**

என்ற அடிகளின் மூலம் மருதநிலத்து மக்கள் காக்கைக்குச் சிவந்த பலிச்சோற்றை வைத்தனர் என்பதை ஆய்ந்து உணர முடிகிறது.

**உடை**

பொருநராற்றுப்படையில் இடம் பெறும் கரிகாலன் தன்னிடம் வரும் புலவர்களுக்கு நல்ல உணவும் சிறந்த ஆடைகளும் தருபவன். பலநாட்களுக்கு முன்பே நட்புக் கொண்டவர்களைப் போல பொருநர்களை ஆர்வத்தோடு பேசி அருகில் இருத்திக் கொள்வான். அவன் பார்க்கும் பார்வை பொருநர்கள் மனதைக் குளிரச் செய்யும் அவர்கள் கட்டியிருந்த ஆடை வேர்வையால் நினைந்து கிழிசலைத் தைத்திருந்த இடங்கள் தெரிய, ஈரும் பேனும் இணைந்திருந்து மிகவும் அழுக்காக இருந்தது. அதை உடனே நீக்கச் செய்து பாம்பின் தோல் போன்ற மிகவும் மென்மையான, பார்த்தால் இழை தெரியாத பூத்தொழிலை உடைய அழகான ஆடையைக் கொடுத்து அணியச் செய்வான்.

**"ஈரும் பேனும் இருந்து இறைகூடி**
**வேரொடு நனைந்து வேற்றுஇழை நுழைந்த**
**துன்னற் சிதாஅர் துவர நீக்கி**
**நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து**
**அரவுஉரி அன்ன, அறுவை நல்கி" (பொருந.79 – 83)**

என்னும் அடிகள் மூலம் பொருநர்களுக்குப் புத்தாடை தந்து வரவேற்றான் கரிகாற்சோழன். என்பதை அறியமுடிகிறது. கரிகாலனை நெருங்கிச் சென்று நின்றால், தாய்ப்பசு ஒன்று தன் கன்றை நோக்குவது போல் மிக்க அன்போடு அவன் நோக்குவான். வறுமை இல்லாதபடி விரைவில் பல பரிசுகள் வழங்கிச் சிறப்பிப்பான். அழுக்கு ஆடையை நீக்கி, தூய பட்டாடையினை உடுத்திக் கொள்ளுமாறு தருவான். மனிதன் வாழ்வதற்கு இன்றியமையாத தேவைகள் உணவும் உடையும் என்பதனை உணர்ந்து கரிகாலன் வழங்கும் பண்பு போற்றத்தக்கதாய் உள்ளது.

**உறைவிடம்**

மக்கள் வாழ்வதற்கு உறைவிடம் அவசியமான ஒன்றாகும். ஆனால் சங்ககாலக் கலைஞர்கள் நிரந்தரமாகத் தங்குவதற்கு இடம் இல்லாமல் செல்லும் இடங்களில் தங்கி வாழ்க்கையைப் போக்கினர். பொருநராற்றுப்படையில் இடம் பெறும் பெருநர்கள் கரிகாற் பெருவளத்தானின் அரண்மனையில் ஒருபுறத்தே துயிலும் இடத்தில் உறங்கினர். தவம் செய்கின்ற மக்கள் தம் துன்பம் நீங்கி தவத்தின் பயனை அடைந்ததைப் போன்று மகிழ்ச்சியோடு அங்கே தங்கினர். வழிச் சென்ற களைப்பு நீங்கத் தூங்கினர்.

**"திருங்கிளர் கோயில் ஒரு சிறைத் தங்கி**
**தவம் செய் மாக்கள் தம் உடம்பு இடாஅது**
**அதன்பயம் எய்திய அளவை மான**
**அறுசெல் வருத்தம் அகல நீங்கி" (பொருந. 90-93)**

என்னும் பாடல் அடிகள் தேறல் உண்டதால் ஏற்பட்ட மயக்கமும், நடுக்கமும் தவிர வேறு துன்பங்கள் அவர்களுக்குக் கிடையாது என்றும் பின்பு காலையில் மயக்கம் நீங்கி எழுந்தனர் என்றும் பொருநராற்றுப்படை இயம்புகிறது. உணவு, உடை, உறைவிடம் இம்மூன்றையும்

மன்னர்களிடம் பெற்று வளமாக வாழ்ந்து வந்தனர் என்பதை இதன் மூலம் ஆய்ந்து அறியமுடிகிறது.

**விருந்தோம்பல்**

தமிழர்களின் வாழ்வியல் பண்புகளில் ஒன்று விருந்தோம்பல் ஆகும். பொருநராற்றுப்படையில் இடம்பெறும் சோழன் கரிகால் பெருவளத்தான் விருந்தோம்பல் பண்பில் மிகச்சிறந்து விளங்கினான். தம்மை நாடி வரும் கலைஞர்களை மதித்துப்போற்றும் பண்பாடு கரிகால்வளவனிடம் இருந்தது. அறுகம்புல்லைத் தின்ற செம்மறியாட்டுக்கடாயின் தொடைக்கறியை உண்ணுங்கள் உண்ணுங்கள் என்று பொருநர்களுக்கு மன்னன் பலமுறை வேண்டித்தந்தான். இரும்புக் கம்பியில் கோத்துப் பக்குவமாகச் சுடப்பட்ட அக்கறியின் கொழுத்த துண்டுகளைச் சூடுமாறாமல் வாயிலிட்டுக் கொண்டு இடப்பக்கமும் வலப்பக்கமுமாக மாற்றி மாற்றிச் சூடாற்றித்தின்றனர். இவ்விறைச்சி உணவு வேண்டாம் என்ற நிலை பொருநர்களுக்கு ஏற்பட்ட போது சுவையான இனிமையான பல வகையான பணியாரங்களைத் தந்தான் என்பதைக் கீழ்க்கண்ட அடிகள் விளக்குகின்றன.

**"துராஅய் துற்றிய துருவை அம்புழுக்கின்**
**பராஅரை வேவை பருகி எனத்தண்டி**
**காழின்சுட்ட கோழ்ஊன் கொழுங்குறை**
**ஊழின் ஊழின் வாய்வெய்து ஒற்றி**
**அவைஅவை முனிகுவம் எனினே சுவைய**
**வேறுபல் உருவின் விரகு தந்து இரீஇ"** **(பொருந.,103 – 108)**

இவ்வாறு கரிகாலன் ஊன் உணவை வழங்கிய பின் இன்பத்தை மிகுவிக்கும் கள்ளையும் வழங்குவான். பின் செறிவு அமைந்த மத்தளத்தை இயக்கி சிறந்த யாழையும் இயக்கி விறலியரை இசைபாடச் செய்து, ஆடச்செய்து பொருநர்களை மகிழ்விப்பான். பகலும் இரவும் இறைச்சியையும் பிற உணவு வகைகளையும் தின்றதால் அப்பொருநர்களின் பற்கள் நிலத்தை உழுத கொழுவைப் போலத் தேய்ந்து மழுங்கும். அவர்கள் மூச்சு விடவும் முடியாமல் திணறுவார்கள். தெகட்டிவிட்டக் காரணத்தால் அதன்பிறகு அவர்களுக்கு உணவைப்பார்த்தாலே வெறுப்பாக இருக்கும். அந்த அளவிற்கு சோழன் கரிகாலன் உணவு கொடுத்து உபசரித்து நாட்கணக்கில் அவர்களோடு பழகி இருப்பான். வள்ளல் உணவு அளிப்பதுடன் மட்டும் இல்லாமல் பணிவோடு இருக்கும் முறை போற்றுதற்கு உரியதாக உள்ளது. இவ்வாறு பொருநர்களுக்கு உணவு கொடுத்து உபசரிக்கும் வாழ்வியல் பண்பு பொருநராற்றுப்படையில் இடம் பெறுவதைக் காணமுடிகிறது.

**முடிவுரை**

பொருநராற்றுப்படையில் இடம் பெறும் வள்ளல் சோழன் கரிகால் பெருவளத்தான் உணவு, உடை, உறைவிடம் மூன்றையும் விருந்தோம்பல் மூலம் பொருநர்களுக்கு வழங்கி சிறப்பித்தான். இல்லையென்று வருவோருக்கு மிகுதியாக வழங்கும் இல்லோர் செம்மல் கரிகாலனைப் போல நல்ல தமிழர்கள் தமிழகத்தில் உருவாக வேண்டும். பொருநராற்றுப்படையில் பொருநர்கள் மக்களையும், மன்னர்களையும், வள்ளல்களையும் நம்பியே வாழ்ந்தார்கள் என்பதை ஆய்ந்து அறியமுடிகிறது.

# ‘பூவை’ சிறுகதையில் அடிமைச் சமூகம் உருவாக்கப்படுதல்

***முனைவர் ப.அன்பரசி,** உதவிப்பேராசிரியர், இளங்கலைத் தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

**முன்னுரை**

மக்கள் சமூகம் பல்வேறு பரிணாம வளர்ச்சிகளின் அடிப்படையில் நாகரிகம் பெற்றதாக மாறியது. அத்தகைய பரிணாம வளர்ச்சி வரலாற்றை,

“1. பழங்கால இனக்குழுப் பொதுவுடைமைச் சமூகம் (Primitive Communism)
2. அடிமைச் சமூகம் (Slavery Society)
3. நிலவுடைமைச் சமூகம் (Feudalism)
4. முதலாளித்துவச் சமூகம் (Capitalism)
5. சமதர்மச் சமூகம் (Socialism)” (க.பஞ்சாங்கம், இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப.111)

என்று காரல் மார்க்ஸ் குறிப்பிடுவார். அவற்றில் இரண்டாவதான அடிமைச் சமூகம் கி.ராஜநாராயணனின் பூவை சிறுகதையில் சித்திரிக்கப்பட்டுள்ளமையை ஆராய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

**அடிமை**

ஆடு, மாடுகளைப் போன்றே மனிதர்களும் பிறரது தேவையை நிறைவேற்றுவதற்குரிய உடைமைப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டனர். “வெற்றி பெற்ற இனக்குழு ஆடு, மாடுகளைக் கவர்ந்து செல்வதைப் போலவே (தொல்காப்பியரின் வெட்சி முதலிய திணைகள் இதைத்தான் நினைவுபடுத்துகின்றன) தோற்றுப்போன இனக்குழு மனிதர்களைக் கைப்பற்றி வெட்டிச் சாய்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் காலப்போக்கில் ஆடு, மாடுகளை உணவு உற்பத்தியில்ஈடுபடுத்துவது போல இந்த மனிதர்களையும் உழைப்பில் ஈடுபடுத்தலாம் என்று அனுபவத்தால் அறிந்து கொண்ட போது அவர்களைக் கொல்லாமல் அடிமைகளாக்கினர். உற்பத்திக் கருவிகளில் ஒன்றாக இநத மனித அடிமை பயன்படுத்தப்பட்டன. கருவி பேசாது; அடிமை பேசுவான்; இதுதான் வேறுபாடு. இதைத்தான் அரிஸ்டாட்டில் என்ற கிரேக்க அறிஞர் “அடிமை ஒரு பேசுங்கருவி” என்று வருணித்தார் (க.பஞ்சாங்கம், இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப.111). அடிமை சொந்தக்காரனது உடமையாக, பேசாத பொருளாகும்.

பூவை சிறுகதையில் பேரக்காள் தனது சுதந்திரத்தை இழந்துவிட்டு, சுகாதாரமற்ற சூழலில் பணிபுரிபவளாக உள்ளாள். ‘அடிமை பேசுங்கருவி’ என்ற அரிஸ்டாட்டிலின் கூற்றிற்கேற்ப பேரக்காள் உள்ளதை,

“கல்யாணப் பெண் ஓர் அனாதை. சின்ன வயசிலேயே அவள் எங்கள் சித்தப்பாவின் வீட்டிற்கு எருமை மாடு மேய்க்க வந்தாள். வீட்டு வேலையெல்லாங் கூடச் செய்வாள். சாப்பிடுகிற நேரம்தவிர அந்த எருமை மாடுகளின் சாணமூத்திர வாடையில்தான் வாசம் அவள். ஊமை இல்லையென்றாலும் வாய்திறந்து அதிகம் பேசமாட்டாள்” (கி.ராஜநாராயணன், கி.ராஜநாராயணன் கதைகள், ப.228)

என்ற கதைப்பகுதி எடுத்துரைக்கின்றது. உடைமையாளர்கள் சொல்லும் பணியைக் காலம் தவறாது செய்பவளாக இருந்துள்ளதை,

“செய்யச் சொல்லுகிற வேலையை எவ்வளவு நேரமானாலும் எந்த நேரமானாலும் தட்டாமல் செய்வாள்” (கி.ராஜநாராயணன், கி.ராஜநாராயணன் கதைகள், ப.228)

என்ற பகுதி விவரிக்கின்றது. பதில் பேசாத, அதிகம் வேலை பார்ப்பவர்களாக வேலைக்காரர்களைத் தேர்ந்தெடுத்ததை,

“சந்தையில் மாடு பார்க்கிறதில் சித்தப்பா எவ்வளவு சாமர்த்தியசாலியோ அவ்வளவுக்கு வேலைக்காரனை இனம் கண்டுகொள்வதிலும் உண்டு” (கி.ராஜநாராயணன், கி.ராஜநாராயணன் கதைகள், ப.229)

என்ற கதைப்பகுதி விவரிக்கின்றது. அடிமைகளைத் தேர்ந்தெடுத்த முறைகளை இக்கதைப்பகுதி தெளிவிக்கின்றது.

**ஓய்வின்மை**

தொழிற்புரட்சியின் காரணமாக தொழிலாளர்களுக்கு எட்டு அல்லது பன்னிரெண்டு மணி நேரம் வேலையும் மற்ற நேரங்களில் ஓய்வும் என்னும் நிலை ஏற்பட்டது. ஆனால் பூவை சிறுகதையில் பேரக்காள் தூங்கும் நேரமும் ஓய்வெடுக்கும் நேரமும் குறைவாக உள்ளதை,

"ராத்திரி பத்து பதினொரு மணிக்கு வீட்டு ஆட்கள் பூராவும் தூங்கிக் கொண்டிருப்பார்கள். தொழுவில் மாடுகள் தூங்கிக்கொண்டிருக்கும். கடேசியில் பாட்டிதான் சொல்லுவாள், "பேரக்கா; சரி போதும், நீ தூங்கப்போ." பாட்டிக்குத் தூக்கம் வரும்வரை கை கால்களைப் பிடித்துவிடவேண்டும் அவள்.

பாட்டிக்குத் தூக்கமே வராது. ஒரு சின்ன கோழித்தூக்கம் போடுவாள். மூணு மணிக்குத் தொழுவின் கூரைமேல் உட்கார்ந்திருக்கும் சேவல் இறக்கைகளைப் படபடவென்று தட்டிச் சோம்பல் முறித்து ஒரு கொக்கரக்கோ சத்தம் கொடுக்கும்.

சேவலின் முதல் சத்தத்தை அடுத்து பாட்டியின் சத்தம் வரும் "பேரக்கா, ஏட்டி எந்தி!" இந்த ஒரு வார்த்தைக்காகவே காத்திருந்தது போல் துள்ளி விழுந்து எழுந்திருப்பாள் பேரக்காள்" (கி.ராஜநாராயணன், கி.ராஜநாராயணன் கதைகள், ப.228)

என்ற கதைப்பகுதி விவரிக்கின்றது.

**சுரண்டல்**

பண்டைக் காலத்தில் வேலையும் உடைமையும் அனைவருக்கும் பொதுவாக இருந்தது. ஆனால் அடிமைச் சமூக காலத்தில் உடைமையாளர்கள், உழைப்பாளிகள் என்ற வேறுபாடு உண்டானது. அதனால் "அடிமைச் சமூதாயத்தில் அடிமைகள் உழைக்க வேண்டும். அடிமைக்குச் சொந்தக்காரர்கள் உழைக்க வேண்டியதில்லை" (க.பஞ்சாங்கம், இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப.111). ஒரு மனிதனது சக்திக்கு ஏற்ப வேலை கொடுக்க வேண்டும். ஆனால் அடிமைச் சமூகத்தில் அவனது சக்திக்குமீறிய அதிக வேலை கொடுக்கப்படுகின்றது. வேலைக்குப் போதுமான கூலி கொடுக்கப்படாமல் அவர்களது உழைப்பு சுரண்டப்பட்டது. இந்நிலையில் தொழிலாளி வர்க்கம் தன் மேல் நிகழ்த்தப்படும் சுரண்டலைப் புரிந்து கொண்டு புரட்சிகர வர்க்கமாக வளர்ச்சியடைவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. அவ்வாய்ப்பினை,

"சம்சாரி வேலைக்கு வரும் கொத்தாட்கள், ஊர்க்கிணற்றிலிருந்து குடம், குடமாகத் தண்ணீர் சுமக்க மறுத்தார்கள். அதனால் சம்சாரிகள் அறுநூறு, ஆயிரம் என்று செலவழித்து வீடு தவறாமல் 'அடி பம்ப்' போட்டார்கள்" (கி.ராஜநாராயணன், கி.ராஜநாராயணன் கதைகள், ப.229)

என்ற கூற்று தெளிவிக்கின்றது. இவ்வாறு தாங்கள் சுரண்டப்படுவதற்கு எதிராகப் போராடி மக்கள் தங்கள் உரிமைகளைப் பெற்றாலும் சிலர் தாங்கள் சுரண்டப்படுகின்றோம் என்று அறியாமலேயே உள்ளனர் அல்லது அதனை அறியாதவாறு அவர்கள் உருவாக்கப்படுகின்றனர். தான் சுரண்டப்படுவதை அறியாதவளாக பேரக்காள் உள்ளதை,

"சித்தப்பாவின் வீட்டில் அந்த மாறுதல் ஏற்படவே இல்லை. குடம் உட்காருவதற்கு பேரக்காளின் உறுதியான இடுப்பு இருந்தது; குடத்தின் கழுத்தை இழுத்து அணைக்கப் பேரக்காளின் வலிமையான கை இருந்தது. பெரிய வாளியின் தாம்புக் கயிற்றைக் கிணற்றிலிருந்து தண்ணீரோடு இழுத்து இழுத்து இரைக்கும்போது அவளது பருத்த மார்பையும் புஜங்களையும் பார்த்து கிராமத்து இளவட்டங்கள் பெருமூச்சு விடுவார்கள்" (கி.ராஜநாராயணன், கி.ராஜநாராயணன் கதைகள், ப.229)

என்ற கதைப்பகுதி தெளிவிக்கின்றது.

எக்காலத்திலும் வேலையாட்களை எதிர்த்துப் பேசாதவர்களாக வைத்துள்ளனர். அளவில்லாத பணிப்பளுவினை அவர்கள் ஏற்றுக் கொண்டு வாழ்வதை,

"வேலை நெருக்கடியான விதைப்பு நாட்களில் சித்தப்பாவின் வீட்டுக்கு வேலைக்காரர்களின் தட்டுப்பாடு ஏற்பட்டதே இல்லை. அப்படி வந்து சேர்ந்தவர்களில் ஒருவன்தான் குமரய்யா" (கி.ராஜநாராயணன், கி.ராஜநாராயணன் கதைகள், ப.229)

என்ற கதைப்பகுதி விவரிக்கின்றது.

**உடைமையாளர்களின் ஆதிக்கம்**

தன்னிடம் பணிபுரிபவர்களை ஆடு, மாடு போன்ற தனக்கான உடைமைப் பொருளாக உடைமையாளர்கள் எண்ணுவர். அதனால் பணிபுரிபவர்களுக்கு எவ்விதத்திலும் உரிமைகள்

கிடையாது. பணியாட்களுக்குக் கொடுக்க வேண்டிய வசதிகளை ஏற்படுத்தித் தராது உள்ளனர். தாங்கள் எண்ணியது போல் அவர்களது உடலிலும் வாழ்க்கையிலும் அவர்களைக் கேளாமலேயே மாற்றத்தை ஏற்படுத்துகின்றனர். பேரக்காளின் தலை ரோமங்களை அவளைக் கேளாமலேயே அவளது உடைமையாளர்கள் வெட்டியதை,

"தூக்கணாங் குருவிக்கூடுபோலக் காட்சியளித்த அவளுடைய தலைமயிரை சித்தப்பா முதல் காரியமாகக் குடிமகனை வரவழைத்து மழுங்கச் சிரைக்கச் சொன்னார். கொஞ்சகாலம் இது தொடர்ந்து நீடித்தது. அப்போது, பேரக்காளைப் பார்க்கிறவர்கள் 'நல'ல ஆட்டுரல் குழவி போல்' என்று சொல்லிச் சிரிப்பார்கள்.

அவள் வளர்ந்த பிறகு, மொட்டையிலிருந்து 'பாப்' வைத்துக் கொள்ள அனுமதித்தார்கள். சித்தப்பா வீட்டுப் பையனகளுக்கு பார்பர் வந்து கிராப் வெட்டிவிடும்போது பேரக்காளுக்கும் அது ஒழுங்காக நடைபெறும் - அவளைக் கேளாமலேயே" (கி.ராஜநாராயணன், கி.ராஜநாராயணன் கதைகள், ப.228)
என்ற கதைப்பகுதி விவரிக்கின்றது. பணியாளர்களின் விருப்பம் கேளாமலேயே அவர்களது உடலில் மாற்றங்கள் உடைமையாளர்களின் விருப்பத்திற்கேற்ப செய்யப்பட்டது. தான் என்னவாக, எவ்வாறு இருக்கிறோம் என்பது அறியாமல் அவர்கள் உள்ளதை,

"அந்த வளர்த்திலும் அவள் பாப் வைத்துக் கொண்டிருந்தது, சிலர் அவளை இந்திரா காந்தி என்று பட்டப்பெயர் சூட்டி அழைத்தார்கள். பேரக்காள் அதுக்கு ஒன்றும் சொல்லமாட்டாள். இந்திராகாந்தி தன்னைப்போல் ஒரு பெண் என்றோ, இந்தியாவையே ஆளும் ஒரு மாதரசி என்றோ அவளுக்குத் தெரியாது" (கி.ராஜநாராயணன், கி.ராஜநாராயணன் கதைகள், ப.228-229)
என்ற கதைப்பகுதி தெளிவிக்கின்றது.

பெண்களுக்கு இயல்பாக இருக்க வெண்டிய எவ்வித விருப்பமும் இல்லாதவளாக, அவ்விருப்பத்தை அனுபவிக்காதவளாக பேரக்காள் உள்ளாள். பெண்களுக்கு இருக்கும் இயல்பான விருப்பங்களுள் ஒன்று பூச்சூடுதல். பேரக்காள் வாழ்நாளில் பூச் சூடவில்லை என்பதால் திருமணத்தன்று பூச்சூடி, அதன் மணம் அவளை மயக்கமுறச் செய்கிறது என்பதை,
"கழுதை! ஒரு நாளாவது தலையில் பூ வைத்திருந்தாலல்லவா; இன்னைக்குச் சிங்காரிக்கும்போது பூ வாசம் தாங்காமல் மயக்கம் போட்டுட்டது" (கி.ராஜநாராயணன், கி.ராஜநாராயணன் கதைகள், ப.229-230)
என்ற கூற்று விவரிக்கின்றது.

**அடிமைச் சமூகம் உருவாக்கப்படுதல்**

தன்னிடம் பணிபுரிபவர்களை அடிமைகளாக நடத்தும் முறையோடு சேர்த்து அடிமைகளை உருவாக்கும் நிலையும் இருந்தது. அதாவது பணியாட்களுக்குள் திருமணம் முடித்து வைத்து, அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் மூலமாக இன்னொரு தலைமுறையினரை அடிமைகளாக உருவாக்குகின்றனர். அதனால் அடிமைச் சமூகம் உருவாகப்படுதலை,

"குமரய்யா - பேரக்காள் 'நெருக்கத்தைக்' கண்டுபிடித்ததில் பாட்டி நிபுணியாக இருந்ததினால், அவள் இருவரையும் சேர்த்து வைத்து முடிச்சுப் போட்டுவிடுவது என்று தீர்மானம் ஆயிற்று.

'நூறு கல்யாணம் கண்ட வீடு சிறப்பானது' என்று ஒரு நம்பிக்கை. ஆகவே இந்தக் கல்யாணத்தைத் தங்கள் வீட்டிலேயே தங்கள் செலவிலேயே நடத்தி வைப்பது என்று ஆரம்பித்துவிட்டார்கள். இதனால் பேரக்காளும் குமரய்யாவும் அந்த வீட்டுக்கு மேலும் கடமைப்பட்டவர்களானார்கள்" (கி.ராஜநாராயணன், கி.ராஜநாராயணன் கதைகள், ப.229)
என்ற கதைப்பகுதி விவரிக்கின்றது.

**முடிவுரை**

அடிமை என்ற பெயரில் அடிமையாக நடத்தப்படும் முறையிலிருந்து மாறி வேலையாட்கள் போன்றும் கடமைப்பட்டவர்களாக எண்ண வைத்தும் அடிமையாக்கும் முறை இருந்துள்ளமையையும் பணிபுரிபவர்களுக்கு எவ்வித வசதியும் செய்து கொடுக்காமல் அவர்களது விருப்பமில்லாமலேயே அவர் தமது வாழ்க்கை முடிவுகளை எடுக்கும் உரிமையை உடைமையாளர்கள் எடுத்துக் கொண்டமையையும் கி.ராஜநாராயணன் 'பூவை' சிறுகதையில் பதிவு செய்துள்ளதை அறிய முடிகின்றது.

# கண்ணதாசனின் திரையிசைப் பாடல்களில் தத்துவக் கோட்பாடுகள்

***திருமதி.கோ.புவனேஸ்வரி,** பகுதிநேரமுனைவர் பட்டஆய்வாளர், பெரியார் பல்கலைக்கழக உறுப்புக்கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாப்பிரெட்டிப்பட்டி. 636905. தருமபுரி மாவட்டம்.

**முன்னுரை**

ஈடு இணையற்றவர் கவிஞர் கண்ணதாசன். தமிழ் இலக்கியத்திற்கும், திரைப்படத் துறைக்கும் பெருமைச் சேர்த்தவர். சுமார் 10,000–க்கும் மேற்பட்ட திரையிசைப் பாடல்களை இயற்றியுள்ளார். பாமரரும் உணரும் வண்ணம், காதுக்கு இனிமையாக இருப்பதோடு, கருத்திற்கும் இனிய சொல்நயம் படைத்த பாடல்களை வழங்கும் வல்லமை பொருந்திய "மாபெருங் கவிஞர் கண்ணதாசன்" ஆவார். அவர் பாடல்களில் பல்வேறு விதமான கோட்பாடுகளை கையாண்டுள்ளார். அவற்றுள் ஒன்றான தத்துவக் கோட்பாட்டினைப் பற்றி காணலாம்.

**தத்துவம்**

ஆங்கிலத்தில் Philosophy என்பதை தத்துவம் என்று கூறுவர். தத்துவம் என்ற சொல்லுக்கு உண்மைப் பொருள் என்பது பொருளாகும். உண்மைப் பொருளிலிருந்து உண்டாகும் காரியங்களிலும் உண்மைப் பொருள் அடங்கி இருப்பதால் அக்காரியங்களையும் தத்துவம் என்கிறோம் என்று தமிழ் கலைக்களஞ்சியம் விளக்கம் அளிக்கின்றது.

தத்துவம் என்பது கருப்புபூனையை குருட்டுக்கண் கொண்டு தேடுவதை போன்றதாகும். மேலும் தத்துவஞானம் என்பது வாழ்க்கைக் கலைஎ ன்று கூறியுள்ளார் புருடாக்.

தத்துவம் என்பது ஒரு பொருளின் உண்மை நிலையைத் தெரிந்து கொள்ளும் இயல்பு உடையது எனலாம். தத்துவ ரீதியாக ஒருவன் பேசுகிறான் என்றால் உண்மையின் இயல்பை விளக்குகிறான் எனலாம் என்கிறார் கவிஞர் கண்ணதாசன்.

**இறைத் தத்துவம்**

மதத்தின் மீது வைத்த அன்பை பக்தி என்கிறார் கண்ணதாசன். பக்தி என்னும் போதே சமயச் சிந்தனை தோன்றிவிடுகிறது. அறிஞர்கள் பக்திக்கு இணையான தமிழ்ச் சொல்லாக அன்பைக் கூறுவார்கள்.

திரையிசைப் பாடல்கள் மூலம் மக்களிடம் பக்தி உணர்வை ஏற்படுத்திய கண்ணதாசன், அப்பாடல்கள் மூலம் மனிதனுக்கும், இறைவனுக்கும் உள்ள தொடர்பு பற்றியும், மனிதன் தன் அளவு கடந்த பக்தியின் மூலம் இறைவனை அடையும் வழிமுறைப் பற்றியும் கூறியுள்ளார்.

கண்ணதாசன் பூஜ்ஜியத்துக்குள் இறைவன் இருக்கிறான் என்பதை,

**" பூஜ்ஜியத்துக்குள்ளே ஒரு ராஜ்ஜியத்தை**
**ஆண்டுக் கொண்டு புரியாமலே இருப்பான் ஒருவன்**
**ஆவனை புரிந்துக் கொண்டால்**
**அவன் தான் இறைவன்"**

என்று பாடிய பாடல் வரிகளின் மூலம் விளக்குவதோடு, பூஜ்ஜியத்துக்குள்ளே வெட்டவெளியான ராஜ்ஜியத்தை ஆண்டுகொண்டு புரிந்துகொள்ள முடியாதபடி ஒருவன் இருக்கிறான். ஆவனை புரிந்துகொண்டால் அவன் தான் இறைவன் என்று கூறுகிறார்.

இறைவன் எங்கெல்லாம் இருக்கிறான் என்பதை,

**"ஊருக்கு நீ உழைத்தால் உன்னருகே அவன் இருப்பான்**
**உண்மையிலும் அன்பினிலும் ஒன்றாய் கலந்திருப்பான் "**

என்று கூறி மற்றவர்களுக்காகவும் உழைக்க வேண்டும். அதாவது நமக்கு கீழ் உள்ளவர்களுக்கு நம்மிடத்தில் உள்ளதை கொடுத்து உதவ வேண்டும். இல்லை என்று வந்தவர்க்கு இல்லை என்று சொல்லாமல் நீ வாழ்ந்து வந்தால் அந்த வாழ்க்கையில்

இறைவன் இணைந்திருப்பான் என்றும் நீ அனைவரிடமும் உண்மையுடனும் அன்புடனும் நடந்து கொண்டாய் என்றால் அதில் இறைவனை காணலாம் என்கிறார்.

**தன்னையறிதல்**

மற்றவர்களை ஒருவன் ஏமாற்றலாம். ஆனால் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ள முடியாது. தன் நிறைகுறைகளை தெரிந்துக் கொண்டு நிறைகளை அதிகப்படுத்தியும், குறைகளை களையவும் முயற்சி செய்பவர்களும் வாழ்வில் வெற்றி அடைவது உறுதி.

இதனை அறிந்து கொண்ட கவிஞர்,

**"உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால்**
**உலகத்தில் போராடலாம்**
**உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் - தலை**
**வணங்காமல் நீ வாழலாம் "**

என்ற பாடலின் மூலம் எவன் ஒருவன் தன்னை அறிகின்றானோ அவனே உலகத்தில் போராடமுடியும் என்று கூறுகிறார். தன்னை வென்ற ஒருவனால் மட்டுமே உயர்விலும், வாழ்வில் தோற்றாலும் மற்றவர்கள் முன்பு தலை தாழாமல் வாழமுடியும் என்கிறார்.

**தேசப்பற்று**

இவ்வுலகில் தேசப்பற்றினை எடுத்துரைக்காத கவிஞர்களே இல்லை. கண்ணதாசன் தன் பாடல்களில் தேசப்பற்றினைப் பற்றி சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார்.

**"அச்சம் என்பது மடமையடா**
**அஞ்சாமை திராவிடர் உடமையடா**
**ஆறிலும் சாவு நூறிலும் சாவு**
**தாயகம் காப்பது கடமையடா"**

என்ற இந்த வரிகளின் மூலம் பயம் கொள்வது முட்டாள்தனம் என்றும் தீரத்துடன் செயல்படுவது தமிழர்களின் பண்பாகும். நமக்கு எப்பொழுது வேண்டுமானாலும் மரணம் ஏற்படலாம். ஆனால் வாழும் வரை நமது தேசத்தை காப்பாற்றுவது நம் ஒவ்வொருவரின் கடமையாகும் என்று திரையிசைப் பாடல்களின் மூலம் மக்கள் மனதில் உள்ள அச்சத்தை போக்கி தேசப்பற்றினை விதைத்தவர்.

**சாதிஒழிப்பு**

சமுதாயம் முன்னேறவும் உலகம் உயர்ந்திடவும் எவன் ஒருவன் உழைக்கின்றானோ அவனே உயர்ந்த சாதி. அவன் வெள்ளை நிறமுடையவனாக இருந்தாலும் சரி, கருப்புநிறம் உடையவனாக இருந்தாலும் சரி அவர்களுடைய உடல்களிலிருந்து வரும் வியர்வையும், கண்ணீரிலும் கலந்திருப்பது உப்புதான். எனவே மற்றவர்களுக்காக உழைக்கும் உழைப்பாளிகளைப் பற்றி,

**"ஒன்றுளங்கள் சாதியே**
**ஒன்றுளங்கள் நீதியே**
**உழைக்கும் மக்கள் யாவரும்**
**ஒருவர் பெற்றமக்களே**
**வெள்ளை மனிதன் வேர்வையும்**
**கருப்பு மனிதன் கண்ணீரும்**
**உப்புநீரின் வடிவிலே"**

என்று பாடிய கண்ணதாசன் சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோட்பாடுகளை கூறி உலக ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளார். அதுமட்டுமல்லாமல் உழைப்பவர்களால் தான் நாடு உயரும் என்றும் ஏமாற்றுபவர்களை சோம்பேறிகள், நோயாளிகள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**தொழிலாளர்கள்**

பொழுதுபோக்காய் இருந்த திரைத்துறையை சரியாக பயன்படுத்தினார் எனலாம். தொழிலாளர்களின் உழைப்பினை பட்டியலிட்டு தத்துவமாக கூறியுள்ளார்.

**" உழைக்கும் கைகளே**
**உருவாக்கும் கைகளே**
**உலகைப் புதுமுறையில்**
**உண்டாக்கும் கைகளே**
**ஆற்றுநீரை தேக்கிவைத்து**
**அணைகள் கட்டும் கைகளே"**

என்று இப்பாடலில் உழைப்பால் தான் இந்த உலகமே இயங்கிக் கொண்டிருக்கிறது என்று கூறியுள்ளார்.

**காதல்**

கண்ணதாசன் பாடல் எழுதும் போர்துசிறிதும் யோசிக்காமல் நிறுத்தாமல் எழுதும் அளவிற்கு திறமைபடைத்தவர். காதலைப் பற்றிய அவரது வரிகள் அனைவரையும் வருடிச் செல்லும். காதலியின் உடலை வருணிக்கும் கவிஞர்,

**"கட்டித் தங்கம் வெட்டிஎடுத்து**
**காதல் என்னும் சாறுபிழிந்து**
**தட்டிதட்டி சிற்பிகள் செய்த உருவமடா அவள்**
**தளதளவென்று ததும்பி நிற்கும் பருவமடா"**

என்ற பாடலில் தங்கத்தை வெட்டிஎடுத்து அதில் காதல் எனும் சாற்றினைப் பிழிந்து இரண்டையும் ஒன்றிணைத்து சிறந்த கைவண்ணம் கொண்ட சிற்பிகளால் செய்யப்பட்ட தங்கச்சிலைப் போல் உருவாகி பருவமங்கை நிற்கிறாள் என்று காதலியைப் பற்றி கூறி திரையிசைப் பாடலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தினார்.

**சோகம்**

சோகமானது ஒரு மனிதனை நல்ல பண்புள்ளவனாகவோ அல்லது தீயகுணமுள்ளவனாகவோ மாற்றுகிறது. காதலித்து ஏமாந்துப்போன பெண்ணின் வருத்தத்தை நமது கவிஞர்,

**"நினைக்கத் தெரிந்தமனமே**
**உனக்கு மறக்கத் தெரியாதா?**
**பழகத் தெரிந்தஉயிரே**
**உனக்கு விலகத் தெரியாதா?"**

காதலிக்கத் தெரிந்த மனதிற்கு மறக்கத் தெரிவதில்லை. புழகிய உயிருக்கு விலகத் தெரிவதில்லை என்று காதலனை நினைத்து காதலி சோகத்தில் புலம்புவதாக கவிஞர் கூறுகிறார்.

**முடிவுரை**

மனித வாழ்க்கை எனும் வாழ்க்கை கடலை நீந்த தொடங்கினால், வாழ்க்கை கடல் என்பது மாறி வாழ்க்கை சோலைவனமாக மாறிவிடும். அதுபோல எத்துனை பிரச்சினைகள் வாழ்வில் வந்தாலும் இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்தால் வாழ்க்கைப் பயணம் மிகவும் செம்மையாக இருக்கும். எத்தகைய செயலாக இருந்தாலும் நம்பிக்கையுடன் அதைச் செய்தால் சிக்கல்கள் விலகி தானே வழிவிடும். எத்தகைய துன்பம் வந்தாலும் வாழ்வில் நாம் செய்த நன்மைகள் நம்மை காக்கும் என்ற தத்துவத்தை தெள்ளத் தெளிவாக கூறுகிறார் கண்ணதாசன்.

# தமிழ் இலக்கியங்களில் திருச்செங்கோடும் அர்த்த நாரீசுவரர் வழிபாடும்

***முனைவர் சி.அ.தி.சங்கரகோமதி,** (முனைவர் பட்ட ஆய்வாளர்), உதவிப்பேராசிரியர், திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்.

சிவ வழிபாடு தொன்மையான வழிபாடாகும். தமிழ் இலக்கியங்களில் இதற்கான சான்றுகள் உள்ளன. சிவ வழிபாட்டின் குறியீடாக சிவலிங்கத் திருமேனியைக் கூறும் போக்கு வேதகாலத்தில் இருந்தே காணக்கிடைக்கிறது. இது சிவன் சக்தியாகிய இருகூறுகள் இணைந்த வடிவம் ஆகும்.

**"மட்டவிழ் தாமரை மாதுநல் லாளுடன்**
**ஒட்டி இருந்த உபாயம் அறிகிலர்"**

என்று திருமூலர் தனது திருமந்திரத்தில் (918) சிவசக்தி இணைந்த வடிவம் பற்றிக் கூறுகிறார். இவ்வாறு இணைந்த வடிவமே அர்த்தநாரீசுவரர் வடிவமாகும். அர்த்தநாரீசுவரர் என்னும் வடசொல்லுக்கு (அர்த்த - பாதி, நாரீ - பெண், ஈசுவரர் - சிவன்) ஆண்பாதி பெண்பாதியுமான இறைவன் என்று பொருள். இவ்வடிவத்திற்குப் பல்வேறு புராணக் கதைகள் காரணமாகக் கூறப்பட்டாலும், ஆணும் பெண்ணும் சரிநிகர் என்னும் ஒப்புமையை வலியுறுத்தும் வடிவமாகக் கொள்வதில் பேதமிருப்பதில்லை. சிற்பங்களில் அர்த்தநாரீசுவரரின் வலப்பாகம் சிவனுடைய சிறப்புக் கூறுகளைப் பெற்றும், இடப்பாகம் சக்தியின் சிறப்புக் கூறுகளைப் பெற்றும் இலங்கும். பாதி ஆணும் பாதி பெண்ணும் இணைந்தது போன்று இச்சிற்பங்கள் காணப்படும். இவ்வடிவத்தில் இறைவனை வணங்கும் போக்கு தமிழ் இலக்கியங்களில் நிறையவே காணக்கிடைக்கிறது. இதனை வெளிக்காட்டும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.

**திருச்செங்கோடு**

இளங்கோவடிகள் தன்னுடைய சிலப்பதிகாரத்தில் நெடுவேள் குன்றம் என்று திருச்செங்கோட்டைக் குறிப்பிடுகின்றார்.
இவரே,

**"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்**
**ஏரகமும் நீங்கா இறைவன்"** **(மதுரைக் காண்டம், பரி. 189-190)**

என்று கூறுகின்றார். குன்றக் குரவையில் முருகனைப் பற்றிப் பாடும் பொழுது அவன் உறையும் இடங்களைக் கூறுகின்றார். அப்பொழுது திருச்செங்கோட்டையும் குறிப்பிடுகின்றார்.

சிலப்பதிகாரத்திற்குப் பிறகு திருஞானசம்பந்தர் காலம் வரை திருச்செங்கோடு பற்றிய குறிப்புகளை இலக்கியங்களில் காணமுடியவில்லை. திருஞானசம்பந்தர் இரண்டு திருப்பதிகங்கள் திருச்செங்கோட்டின் மீது பாடியுள்ளார். ஒன்று திருக்கொடிமாடச் செங்குன்றூர்ப் பதிகம், மற்றொன்று திருநீலகண்டத் திருப்பதிகம். செங்கோடு எழில் நிறைந்த பகுதியாக இருந்தது என்று கூறுகின்றார்.

**"கொந்தணவும் பொழில் சூழ் கொடிமாடச் செங்குன்றூர்"**
**(சம்பந்தர் தேவாரம்)**
**"கோலமலர்ப் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்"**
**(சம்பந்தர் தேவாரம்)**
**"கொத்தலர் தண் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்"**
**(சம்பந்தர் தேவாரம்)**

என்று திருச்செங்கோட்டின் இயற்கை அழகை வருணிக்கின்றார் திருஞானசம்பந்தர்.
திருச்செங்கோட்டு இறைவனைப் பற்றி,

**"அலைமலி தண்புனலோடு அரவஞ்சடைக் கணிந்து ஆகம்**
**மலைமகள் கூறுடையான் மலையார் இளவாழைக்**

குலைமலி நண்பொழில்சூழ் கொடுமாடச் செங்குன்றூர் நின்ற
தலைமகனைத் தொழுவார் தடுமாற்றறுப்பாரே" (சம்பந்தர் தேவாரம்)

என்று கூறுகின்றார்.

திருச்செங்கோட்டில் அந்தணர்கள் வாழ்ந்தனர் என்பதை,
"சீருறுமந்தணர் வாழ் கொடிமாடச் செங்குன்றூர்" (சம்பந்தர் தேவாரம்)

**என்ற** அடிகளால் கூறுகின்றார்.

"குன்றன மாளிகை சூழ் கொடிமாடச் செங்குன்றூர்" (சம்பந்தர் தேவாரம்)

திருஞானசம்பந்தர் திருச்செங்கோட்டுக்கு எழுந்தருளிய ஞான்று அவர்தம் பரிசனங்களுக்கு நளிர் சுரம் வந்துவிடுகின்றது. அப்பொழுது "அவ்வினைக்கிவ்வினை" என்னுந் திருநீலகண்டத் திருப்பதிகத்தைப் பாடி அந்நளிர் சுரம் அப்பரிசனங்களையும் இந்நாட்டில் உள்ளவர்களையும் பீடிக்காமல் அகற்றிவிடுகின்றார். 'தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டமே' என்று ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் வைத்துப் பாடுகின்றார்.

மனித வாழ்வு உடல், உள்ளம், உயிர் ஆகிய மூன்றும் சேர்ந்தே அமைகிறது. இவ்வாழ்வில் மனிதன் மாசு நீக்கி தூய்மைபெற வேண்டும். அதற்குப் பயிற்சிகள் தேவையாகிறது. அதனை நிறைவு செய்ய ஆகமங்கள் வழிபாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. இவ்வழிபாட்டில் வழிபாடும் முறைகள் மட்டுமின்றி இறைவுருவங்கள் அமைய வேண்டிய முறைகள் மற்றும் வடிவங்களின் வகைகள் பற்றியும் வேதாகமங்கள், மந்திரங்கள், உபநிஷதங்கள், ஞானவாசிஷ்டம் மற்றும் அஷ்டபிரபந்தங்கள் ஆகிய நூல்கள் எடுத்துரைக்கின்றன.

**அர்த்தநாரீசுவரர் பெயர் விளக்கம்**

சிவபெருமானின் திருவுருவங்கள் பலவற்றுள் "அர்த்தநாரீஸ்வர மூர்த்தம் என்பது ஒன்று. 'அர்த்தம் என்பது பாதி', நாரி என்பது பெண், சிவபெருமான் தன் உருவில் பாதி உருவமும், பாதி பெண் உருவமும் கொண்டு விளங்குகிறான். எனவே சிவபெருமானுக்கு 'அர்த்தநாரீஸ்வரன்' என்பது ஓர் பெயராயிற்று."

அர்த்தநாரீஸ்வரர் என்பது வடமொழி சொல். தமிழில் அம்மையப்பர் என்றழைப்பர். மாதொருபாகன், மங்கைபங்கன், மாதுக்கொரு கூறு செய்தான், தையல்பாகன், குழலிபாகன் என்கிற வேறு பெயர்களும் உண்டு.

ஆண்களும், பெண்களும் நிறைந்த உலகில் ஆணில்லாமல் பெண்களோ, பெண்ணில்லாமல் ஆண்களோ தனித்து இயங்கமுடியாது. இருவரும் சரிநிகர் சமானம். இதனைப் புரியவைக்க பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிவபெருமான் எடுத்த அவதாரமே அர்த்தநாரீஸ்வரர் வடிவமாகும்.

**பழங்காலத்தில் அர்த்தநாரீஸ்வரர் வடிவம்**

பழங்கால மக்கள் சிவனைப் பல்வேறு வடிவங்களில் வழிபட்டனர். எவ்வாறென்றால் கைலாய மலையில் உமையுடன் வீற்றிருப்பது சுகபோகி வடிவம் அறம் உரைக்கின்ற ஆலமர் செல்வனாக அமைந்திருப்பது தவயோகி வடிவம் நீலமணி மிடற்று ஒருவன் என்பது நீலகண்ட வடிவம் நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் என்பது அர்த்தநாரீ வடிவம் ஆகும். இவ்வாறு வெவ்வேறு வடிவங்களில் சிவனை வழிபட்டனர். இவ்வடிவங்கள் சிவபெருமானின் பழமையையும், பெருமையையும் காட்டுகின்றன.

**அர்த்தநாரீசுவரர் வழிபாடு**

தென்னகத்திலேயே திருச்செங்கோட்டில் தான் அர்த்த- நாரீசுவரர்க்கென்று தனி ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு அர்த்தநாரீசுவரர் சுயம்பு மூர்த்தியாக விளங்குகிறார் என்று கூறுகின்றனர். அர்த்தநாரீசுவரரின் கருவறை மேற்கு பார்த்துள்ளது. இதனால் இது மிகவும் சிறப்புடையது என்று கூறுகின்றனர்.

உலக வாழ்க்கை சிறப்புற அமைய வேண்டுமானால் ஆணும் பெண்ணும் இணைந்து செயல்பட வேண்டும். இந்தத் தத்துவத்தை உலக மக்களுக்கு விளக்க இறைவன் மேற்கொண்ட வடிவமே அர்த்தநாரீசுவரர் வடிவமாகும். சக்தி இல்லையேல் சிவன் இல்லை. சிவன் இல்லையேல் சக்தி இல்லை. இரண்டும் இணைந்து செயல்பட்டால்தான் உலகியல் வாழ்க்கை இயலும்.

இதனைச்,

"சத்தியுஞ் சிவமுமாய தன்மையில் இவ்வுலகமெல்லாம்"
(சிவஞானி சித்தியார்)

என்ற வரியாலும்,

**“ஆணெலாஞ் சிவமே பெண்ணெலாஞ் சத்தி”** **(வாயு சங்கீதை)**
என்ற வரியாலும் அறியலாம்.

சக்தியானவள் அர்த்தநாரீசுவர வடிவில் இறைவனுடலில் பாதியினைக் கொள்கின்றாள். இது சைவமும் சாக்தமும் ஒன்றிக் கலக்கும் நிலையினைக் காட்டுகின்றது. சக்தியின் உருவம் சிவனை விட்டுப் பிரியா ஒன்று என்பதனையும் அவ்வாறு பிரியின் உலக இயக்கம் ஒன்றுமில்லை என்பதையும் கந்தபுராணம் வலியுறுத்துகின்றது. சக்தி சிவன் என்ற இரு ஆற்றல்களை மின் ஆற்றலுக்கு ஒப்பிடலாம். மின் ஆற்றலக்கு இரு சக்திகளின் இணைப்பே தேவை. இருவேறு தனிக்கம்பிகளில் ஊடுருவிச் செல்லும் இருவேறு சக்திகள். அவ்வாறே தனித்தனியாக இருப்பின் அவை ஆற்றலற்றவையாக அமைகின்றன. இரண்டும் இணையின் உலகையே அழிக்கவும் ஆக்கவும் வல்ல திறனைப் பெற்றுவிடுகின்றன. சிவ சக்தி வடிவமும் அத்தகையதே என்றும், அவை பிரியின் உலகம் இயக்கமில்லாது அழியும் என்றும் கூறலாம். ஆனால் அவை இணையின் உலகில் எல்லாவற்றையும் செய்து முடிக்க இயலும் என்று காண்கின்றோம்.

மனிதர்க்கு வலப்பக்கம் ஆண் பகுதியும் இடப்பக்கம் பெண் பகுதியும் தம்முள் இணைந்து நிற்கின்றது என்று உடல் நூலார் கூறுகின்றனர். ஆண்களுக்கு வலப்பக்கத்தில் பற்றிய நோய் வலிவுடையதென்றும் இடப்பாகத்தில் பற்றிய நோய் எளிமையுடையதென்றும் அது விரைவில் குணமடையும் என்றும் மருத்துவ நூலார் கூறுகின்றனர்.

**இலக்கியச் செய்திகள்**

சங்ககால இலக்கியங்கள் அர்த்தநாரீசுவரர் வடிவு பற்றிப் பலபடப் பேசுகின்றன. அம்மையும், அப்பனும் பிரிவில்லாதவர்கள் என சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

**“பெண்ணுரு ஒரு திறன் ஆகின்று அவ்வுருத்**
**தன்னுள் அடக்கிக் கரக்கினுங் கரக்கும்”** **(புறம். கடவுள் வாழ்த்து)**
என்பது பாரதம் பாடிய பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்து ஆகும்.

**“உமையமர்ந்து விளங்கு மிகையா முக்கண்**
**மூவெயின் மருக்கிய முரண்மிகு செல்வனும்”** **(திருமுருகாற்றுப்படை. 153-154)**
என்று நக்கீரர் பாடுகின்றார்.

**“மிக்கொளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதல்**
**முக்கண்ணான் உருவேபோல் முரண்மிகு குராலும்”**
**(கலித்தொகை.104, வரி. 11-12)**
என்று கலித்தொகை கூறுகின்றது.

சிலப்பதிகாரத்தில் அர்த்தநாரீசுவரர் பற்றிச் சில குறிப்புகள் உள்ளன. இளங்கோவடிகள்,

**“உமையொடு பாகத்து ஒருவனை வணங்கி”** **(சிலம்பு. 22, வரி. 103)**
என்று நடுகற் காதையில் கூறுகின்றார்.
கொற்றவையைக் குறிக்கும் பொழுது,

**“கண்ணுதல் பாகமாளுடையாள்”** **(சிலம்பு. 12, வரி. 3)**
என்றும் கூறுகின்றார்.

சீவக சிந்தாமணியில் சீவகனுக்குக் கொடுப்பதற்குச் சென்றவர்கள் குறையணி அணிந்திருந்ததால் சிவபெருமான் ஒரு பக்கத்திலே கொள்ளப்பட்ட உமையைப் போல் மறைந்து நின்றார்கள் என்று கூறப்படுகின்றது.
பெருங்கதையில்,

**“உமையொடு புணர்ந்த விமையா நாட்டத்துக்**
**கண்ணணங் கவிரொளிக் கடவுள்”** **(பெருங்கதை 1.53:15-6)**
என்று கூறப்பட்டுள்ளது.

இதைப்போல பக்தி இலக்கியங்களில் அர்த்தநாரீசுவரைப் பற்றிய ஏராளமான குறிப்புகள் காணக்கிடக்கின்றன. அதில் திருஞான சம்பந்தர் 449 இடங்களிலும், திருநாவுக்கரசர் 306 இடங்களிலும் சுந்தரர் 124 இடங்களிலும் அர்த்தநாரீசுவரைக் குறிப்பிடுவதாக திருவாவடுதுறை ஆதினக் கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது. இவ்வாறு பழந்தமிழ் இலக்கியங்களிலல் அர்த்தநாரீசுவரர் வழிபாடு பற்றிக் குறிப்பிடப்படுகிறது.

# குறுந்தொகையில் வாழ்வியல் கூறுகள்

***த.தேவகி,** முனைவர்பட்ட ஆய்வாளர், இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**முன்னுரை**

இலக்கியம் மக்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாகும். நம் தமிழ் மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையையும் அவர்களின் எண்ணங்களையும் ஏனைய சங்க இலக்கியங்கள் போன்று குறுந்தொகையும் உணர்த்துகின்றது.

**இயற்கையோடு இயைந்த வாழ்க்கை**

சங்க கால மக்கள் இயற்கையோடு இரண்டறக் கலந்த வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். அந்த இயற்கையைத் தெய்வமாகவும் வழிபாடு செய்தனர். புலவர்கள் மலை கடல் அருவி மலர்கள் பருவங்கள் போன்ற இயற்கையை வர்ணிக்கும் போது அவற்றுடனே மக்களின் வாழ்க்கையில் உள்ள உண்மைகளையும் நீதிகளையும் உணர்த்தினார்கள்.

*"குருதிப் பூவின் குலைக் காந்தட்டே" (குறுந்.1)*
*"கருங்கால் வேங்கை வீயுகு துறுதல்" (குறுந்.47)*
*"சிறு வீ முல்லை" (குறுந்.384)*
*"மால் வரை இழிதரும் தூவெள்ளருவி" (குறுந்.95)*
*"குறுங்கால் அன்னம்" (குறுந்.300)*
*"நெருப்பின் அன்ன செந்தலை அன்றில்" (குறுந்.160)*
*"உரல் கால் யானை" (குறுந்.232)*
*"படுகிளி கடிதம்" (குறுந்.198)*
*"கருங்கால் வெண்குருகு மேயும்" (குறுந்.303)*

போன்ற பாடல்கள் பண்டைய கால மக்கள் தாவரங்கள் விலங்குகள் பறவைகளோடு கொண்டிருந்த தொடர்பையும் புலப்படுத்துகின்றன.

**காதல் வாழ்வு**

அக்கால மக்கள் காதலையும் வீரத்தையும் தம்முடைய இரண்டு கண்களாக போற்றி வாழ்ந்தனர். கண்டதும் காதல் கொண்டு இயற்கைப் புணர்ச்சி நிகழ்கிறது. பிறகு தலைவன் தன்னை விட்டு பிரிந்து விடுவானோ என அஞ்சுகிறாள் தலைவி. அவளது உள்ள குறிப்பறிந்து தலைவன் தேற்றுகிறான். என் தாயும் உன் தாயும் யார் யாரோ நம் தந்தையர் இருவருக்கும் என்ன உறவு நீயும் நானும் முன்பின் பார்த்ததில்லை. இப்பொழுது செம்மண் நிலத்தில் விழுந்த நீர் போல் நமக்குள் அன்பு பரிமாற்றம் நிகழ்ந்துள்ளது என்கிறான்.

*"செம்புலப் பெயல் நீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" (குறுந்.40)*

என்னும் பாடல் வரிகள் கருத்தொருமித்த காதலர்களின் உள்ளப் புணர்ச்சியை காட்டுகிறது.

**அன்பின் ஆழம்**

பொருள்வயிற் பிரிந்த தலைவன் குறித்த காலத்தில் திரும்பவில்லை. தோழி அவனை பழித்துரைக்கிறாள். என் காதலனை பழித்து பேசாதே. எனக்கும் அவனுக்கும் இருக்கும் அன்பானது குறிஞ்சிப் பூவின் தேன் போன்று இனிமையானது. நிலத்தை விட பெரிது. வானத்தை விட நீண்டது. கடலைவிட ஆழமானது என்று தலைவனின் அன்பை இங்கு சுட்டிக்காட்டுகிறாள்.

*"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று*
*நீரினும் ஆரள வின்றே" (குறுந்.3)*

தலைவனின் அன்பில் ஆழத்தையும் தலைமையின் நம்பிக்கையையும் உணர முடிகிறது.

**தலைவியின் உயர்ந்த உள்ளம்**

ஆடவர்கள் பரத்தையை நாடிச் செல்லும் பழக்கம் சங்க இலக்கியத்தில் அதிகமாக காணப்படுகின்றது. தலைவன் தவறு செய்யும்போது தலைவி பொறுமையையும் நிதானத்தையும் கடைபிடிப்பதாகவே சித்திரிக்கப்படுகின்றாள். பரத்தையர் வீட்டிற்குச் சென்று வந்த தலைவனைக்

கண்டதும் எதுவும் பேசாமல் உணவு கொடுத்து உபசரிக்கின்றாள். அவன் தேவைகளை எல்லாம் நிறைவேற்றிய பிறகு இப்பிறவி நீங்கி மறு பிறவி வரினும் நீரே எனக்கு கணவனாக வரவேண்டும். நானே உன் நெஞ்சம் விரும்புபவளாக இருக்க வேண்டும் என்று தன் விருப்பத்தை கூறுகின்றாள்.

***"இம்மை மாறி மறுமை யாயினும்***
***நீயாகியர் என் கணவனை***
***யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே"***

அம்மூவனாரின் இப்பாடல் தலைமகள் துன்பத்தில் இன்பம் காண்பதையும் அவளது உயர்ந்த பண்பையும் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

**மகளிர் நிலை**

பெண்கள் மனையுறை மகளிர் என்று அழைக்கப்பட்டார்கள். வீட்டுக்கு உரியவர்களாகக் கருதப்படும் மகளிர்க்கு ஆண்கள் உயிராகவும் ஆண்களுக்குத் தொழில் உயிராகவும் இருந்துள்ளதை

***"வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்***
***மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென" (குறுந்.135)***

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. தினைப்புனம் காவல் காக்கும் தொழிலையும் பெண்கள் மேற்கொண்டுள்ளனர்.

***"வினைவாய்ச் சிறுகிளி விளைதினைக் கடிஇயர்***
***செல்கென்றோளே அன்னை" (குறுந்.141)***

**உடன்போக்கு**

பெற்றோர்கள் பெண்களின் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்த சில நேரங்களில் இற்செரிப்பும் மிக்க காவல் ஏற்பாடும் செய்துள்ளனர். கட்டுப்பாட்டை மீறி தலைவனோடு உடன்போக்கு சென்றுள்ளனர். உடன்போக்கு சென்ற தலைமகளைத் தேடிய செவிலித்தாய்

***"காலே பரிதப் பினவே கண்ணே***
***நோக்கி நோக்கி வாள் இழந்தனவே" (குறுந்.44)***

என்று புலம்புகிறாள்.

**சாதிப் பாகுபாடு**

அவரவர்கள் செய்யும் தொழிலாலும் வாழும் இடத்தாலும் குறவர், இடையர், ஆயர், உழவர் என்று அழைக்கப்பட்டார்கள்.

***"பார்ப்பன மகனே பார்ப்பன மகனே" (குறுந்.156)***

என்று பார்ப்பனர் பற்றி குறிப்பு காணப்படுவதால் சாதிப்பாகுபாடு இருந்து வந்ததும் தெரிகின்றது.

**சகுனம் பார்த்தல்**

தான் விரும்பிய பொருளின் முடிவினை அறிந்து கொள்வதற்கு சகுனம் பார்க்கும் பழக்கம் நடைமுறையில் இருந்துள்ளது. இதனை புறப்பொருள் வெண்பாமாலை 'விரிச்சி' என்கிறது. தலைவனின் பிரிவை ஆற்றாது வருந்தும் தலைவியிடம் காகம் கரைந்தது. உன் காதலர் வந்து விடுவார் என்கிறாள் தோழி.

***"விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே" (குறுந்.210)***

**ஓரில் பிச்சை**

தலைவன் வாடை காலத்தே திரும்பி வருவதாகக் கூறிச் செல்கிறான். வாடைக் காலம் எப்போது வரும் என்று அறிய விரும்புகிறாள் தோழி. முக்காலமும் உணர்ந்த முனிவரிடம் வாடைக் காலம் எப்பொழுது வரும் என்று கூறினாள். செந்நெல்லரிசி உணவும் நெய்யும் வெந்திரும் என்று ஒரு வீட்டிற்கு பிச்சையை நீ பெறுவாய் என்கிறாள்.

***"ஓரில் பிச்சை ஆர மாந்தி***
***அற்சிரம் வெய்ய வெப்பத் தண்ணீர்***
***சேமச் செப்பில் பெறீஇயரோ" (குறுந்.277)***

பல வீடுகளில் பிச்சை எடுக்காமல் ஒரே வீட்டில் பிச்சை எடுத்து உண்ணும் பழக்கம் இருந்துள்ளது. வெப்பத்தை பாதுகாத்து வைக்கும் சேமச்செப்பு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பே இருந்துள்ளது வியப்பே.

**அறவாழ்வு**

வாழ்க்கையின் இன்பத்திற்கு அடிப்படையான பொருளை ஈட்டுதலே அக்கால ஆடவரின் கடமையாக இருந்தது. தம் முயற்சியால் சேர்க்கும் பொருளின்று வாழும் வாழ்க்கை இரத்தலினும் இழிவானது என்று எண்ணினார்.

***"உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்***
***இல்லோர் வாழ்க்கை இரவினும் இழிவு"***

அவ்வாறு ஈட்டிய பொருளை தனக்கென வைத்துக் கொள்ளாது மற்றவர்களுக்கு வழங்குவதை பெரும்பேறாகக் கருதினர்.

***"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்" (குறுந்.63)***
***"இரவலர் வாரா வைகல் பலாகுக" (குறுந்.137)***

நேர்மையான வழியில் பொருளினை நீட்டி அறத்தோடு வாழும் வாழ்க்கையை சங்ககால மக்கள் பெரிதும் விரும்பி போற்றி வாழ்ந்து வந்தனர்.

# ஆற்றுப்படையில் முல்லை நில வாழ்வியல்

***முனைவர் ம.சந்திரசேகரன்**, முனைவர் பட்ட மேலாய்வாளர், தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024.

சங்க இலக்கியத்தில் ஐந்து ஆற்றுப்படைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்கள் நக்கீரர், முடத்தாமக் கண்ணியார், இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார், கடியலூர் உருத்திரங்கண்ணனார், இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் என்னும் அறிவுசான்ற புலவர்களால் பாடப்பட்டவை. ஆற்றுப்படைக்கு,

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**
**சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்** **(தொல். புறத். நூ.25.)**

எனத் தொல்காப்பியம் இலக்கணம் கூறுகிறது. இவ் இலக்கணமே ஆற்றுப்படைத் துறைப் பாடல்கள் அனைத்திற்கும் இலக்கணமாகும். தமிழகத்தின் வரலாற்றை அறிவதற்கு ஆற்றுப்படைப் பாடல்களும் துணைபுரிகின்றன. குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனும் ஐவகை நில வாழ்வியலையும் வருணனைகளையும் மொழிகின்றன. அதனடிப்படையில் இக்கட்டுரை ‘முல்லை நில வாழ்வியலை’ ஆற்றுப்படைப் பாடல்கள் வழி எடுத்தியம்புகிறது.

**முல்லை நிலச் சூழல்**

காரும் மாலையும் முல்லைத் திணைக்குரிய பொழுதுகளாகும். முல்லை நிலத்தில், பசுமையான அரும்புகளையுடைய அவரையில் பவழம் போன்ற மலர்கள் பூத்தன. கரிய அரும்புகளையுடைய காயா மலர்கள் திரண்ட மயிலின் கழுத்து நிறத்தில் மலர்ந்தன. முசுண்டைக் கொடிகள் கொட்டைப் பெட்டிகள் போல் பூக்களைக் கொண்டன. காந்தள் குலைகள் கைவிரல்கள் போல் பூத்தன. கொல்லைகளில் இந்திரகோபப் பூச்சிகள் ஊர்ந்தன. முல்லைக் கொடிகள் படர்ந்த காட்டில் அருவி நீர் குதித்தோடியது (சிறுபா. 165-170). ‘புலி வருதலைக் கண்டு வெறுத்துத் தன்னைப் பிரிந்து ஓடிய இணையாகிய பெண்மானை நினைந்து கலைமான் கூப்பிடும். வில்லின் ஓசைக்கு அஞ்சிச் சிவந்த கண்களையுடைய மரையேறு தனக்கு முன்னுள்ள குறுங்காட்டில் விரைந்து ஓடும். நறுமணம் கமழும் முல்லைக் கொடிகள் நிறைந்திருக்கும்’ (மலைப. 404-407). இக்காட்சிகள் கார்காலம் வந்தமையைக் காட்டுகின்றன.

**ஊர்கள்**

இடையர் முல்லை நில மக்களாவர். இவர்கள் வசிக்கும் ஊர்களில் சிறு சிறு குடில்கள் காணப்பெற்றன. குடில்களின் வாயிலில் கட்டையான கால்கள் இறுக்கிக் கட்டப்பட்டிருக்கும். அக்கால்களில் ஆடுகள் தின்பதற்குரிய தழைகள் கட்டப்பட்டிருந்தன. குடிலின் வாயில்களில் சிறு புதர்கள் காணப்பட்டன. குடில் கதவுகள் மூங்கில் கழிகளால் செறிக்கப்பட்டிருந்தன. வரகு வைக்கோற் பரப்பப்பட்ட படுக்கையில் ஆட்டுத் தோலைப் பாயாக விரித்து அதன் மீது காவல் காப்போன் படுத்திருப்பான். கிடாய்கள் நீண்ட கயிறுகளால் கட்டப்பெற்றிருந்தன. வளைந்த முகம் உடைய செம்மறி ஆடுகளுடன் வெள்ளாடுகளும் இருந்தன. குடில்களைச் சுற்றி முள்வேலி அமைந்திருந்தன் எரு மிகுதியாகக் காணப்பெற்றது (பெரும்பாண். 147 - 154). இத்தகைய ஊரில் இடையர்கள் வாழ்ந்தனர்.

**இடைச்சியர்**

முல்லை நில இடைச்சியர் அதிகாலையில் எழுந்து புலிக்குரல் போன்று ஒலிக்கின்ற தயிர் மத்தினைக் கொண்டு தயிர் கடைவர். அதிலிருந்து வந்த வெண்ணெயைத் தனியாக எடுத்துவைத்துவிட்டு, மோரை அதற்குரிய பானையில் வைப்பர். புள்ளிகளையுடைய அம்மோர் பானையை, காதில் தாளருவி எனும் சிறுகாதணியை அணிந்தவளும் மூங்கில் போன்ற தோள்களையும் குறிய நெறிப்புடைய கூந்தலையும் உடைய ஆய்மகள் தலையில்

மென்மையான சும்மாட்டின் மீது வைத்து விற்கச் செல்வாள். மோரை விற்றுத் தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களை வாங்கி வந்து தம் சுற்றத்துடன் உண்பாள். இக்காட்சியை,

**நள்ளிருள் விடியற் புள்ளெழப் போகிப்**
**புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி**
**ஆம்பி வான்முகை அன்ன கூம்புமுகிழ்**
**உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து**
**புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட் டிரீஇ**
**நாண்மோர் மாறு நன்மா மேனிச்**
**சிறுகுழை துயல்தரும் காதிற் பணைத்தோட்**
**குறுநெறிக் கொண்ட கூந்த லாய்மகள்**
**அளைவிலை உணவிற் கிளையுட னருத்தி (பெரும்பாண்.155 – 163)**

எனும் பாடலடிகள் காட்டுகின்றன. இடைச்சியர் வெண்ணெயிலிருந்து பெற்ற நெய்யை விற்ற விலைக்குப் பசும்பொன்னை வாங்காமல் எருமை, நல்ல பசு, கன்றுகளை வாங்கியுள்ளனர் (பெரும்பாண். 164 -165). இஃது ஆயர்கள் பொன்னைக்காட்டிலும் மேலாக எருமை, பசு, கன்றுகளை மதித்துள்ளனர் உயர்வாகக் கருதியுள்ளனர் என்பதைக் காட்டுகிறது.

**இடையர்**

முல்லை நிலத்து இடையர் காலில் எப்போதும் செருப்பு அணிந்திருப்பதால் அதன் தழும்பு தெரிகின்ற காலையுடையவர்கள். கையில் கோடாரியைப் பிடித்திருப்பதால் அவர்களின் கை தழும்பும் வலிமையும் பெற்றிருந்தன. தோளில் இருபக்கமும் காவடியைச் சுமப்பதால் தோளில் மென்மையான மயிரினையுடையவர்களாக இருந்தனர். தலையில் பசுவின் பாலைத் தடவினர். காட்டு மலர்களைத் தலையில் கண்ணியாகச் சூடினர். அரையில் ஒற்றை ஆடையை உடுத்திருப்பர். பால் சோற்றை உண்ணும் தன்மையுடையோர். கன்றுகள், பசுக் கூட்டங்களைக் காட்டில் மேய்க்கும் போது மூங்கிலில் தீக்கடை கோலால் தீ உண்டாக்கி துளையிட்ட மூங்கில் குழலில் பாலைப் பண்ணை இனிமையாக இசைப்பர். குழல் ஊதலை வெறுத்தால் குமிழ மரத்திலுள்ள துளையுடைய கொம்பை வளைத்து அதில் மரல் மரத்திறை கயின் நரம்பாகக் கொண்டு யாழிசைத்துக் குறிஞ்சிப் பண்பாடுவர். வண்டினங்கள் தம்மின ஓசையென்று கேட்கும் புல் நிறைந்த அகன்ற நிலமாக முல்லை நிலம் காணப்பட்டது (பெருபாண். 169 - 184).

**தொழில்**

முல்லை நிலத்தார் தாம் வாழ்கின்ற பகுதியைச் சுற்றி முள்ளடர்ந்த வேலியை அமைத்திருந்தனர். இவர்கள் வீட்டின் முன் பெண்யானை கூட்டம் நின்றாற் போல் வரகு முதலிய தானியங்கள் நிறைக்கப்பட்ட குதிர்கள் இருந்தன. வரகுக் கதிரைத் திரிப்பதற்கு யானையின் கால்கள் போன்ற திரிமரங்கள் இருந்தன. புகைபிடித்த கொட்டில்களின் சுவர்களில் சிறிய வண்டிகளின் சக்கரங்களும் கலப்பையும் சார்த்தி வைக்கப்பட்டிருந்தன. வீடுகளின் கூரைகள் கரிய வரகு வைக்கோலால் வேயப்பட்டு மாரிகாலத்து மேகம் போலத் தோன்றும் அழகிய ஊராக அமைந்திருந்தது (பெரும்பாண். 184 - 191). வரகு முதலிய தானியங்கள் விளைந்து விட்டமையால் உருளைகளும் கலப்பைகளும் சுவரில் சார்த்தி வைக்கப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது.

முல்லை நிலத்தார் வீடுகள் நிறைந்த உணவுப் பொருள்களை உடையவர்கள் வளமானவர்கள். நிலத்தை பன்முறை உழுது பயிர் செய்பவர்கள். அதனால் அவர்கள் 'செஞ்சால் உழவர்' எனப்பட்டனர். உழவிற்கு நன்கு பயின்ற காளைமாடுகளைப் பயன்படுத்தியுள்ளனர். காளைகளை நுகத்தடியில் பூட்டிப் பெண்யானையின் வாய் ஒத்த வளைந்த கலப்பையைக் கொண்டு உடும்பு போன்ற வடிவம் உடைய கொழு மூழ்க ஊன்றி உழுதுள்ளனர். விதை வளர்ந்த பின்பு களை எடுத்தல், விளைந்த கதிர்களை அறுவடை செய்தல் முதலான தொழில்சார் செயல்களைச் செய்துள்ளனர் (பெரும்பாண். 196 - 206).

**விருந்தோம்பல்**

இடையர்கள் தம் குடிசைக்கு வருவோர்க்கு நண்டின் பார்ப்பை ஒத்த பசிய தினையாலாகிய சிலுத்த சோற்றைப் பாலோடு தந்துள்ளனர். பூளைப்பூ போன்ற வரகுச் சோற்றோடு வேங்கைப் பூவை ஒத்த அவரைப் பருப்பைச் சேர்த்துச் சமைத்த இன்சுவையான சோற்றினை உணவாகத் தந்துள்ளனர். இதனை,

**மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்**
**இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன**
**பசுந்தினை மூரல் பாலொடும் பெருகுவிர் (பெரும்பாண்.166 - 168.)**

**நெடுங்குரற் பூளைப் பூவி னன்ன**
**குறுந்தாள் வரகின் குறளவிழ்ச் சொன்றிப்**
**புகரிணர் வேங்கை வீகண் டன்ன**
**அவரை வான்புழுக் கட்டிப் பயில்வுற்**
**றின்சுவை மூரற் பெறுகுவிர்** (பெரும்பாண். 192 – 196)

எனும் பாடலடிகள் விளம்புகின்றன.

முல்லை நில மக்களாகிய எயிற்றியர் தாம் வாழும் குடில்களுக்கு வரும் விருந்தினர்க்கு இனிய தித்திப்பான புளிக்கறியிட்ட சுடு சோற்றை ஆமான் சூட்டிறைச்சியோடு வழங்கியுள்ளனர் என்பதை,

**எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு**
**தேமா மேனிச் சில்வளை யாயமொடு**
**ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர்** (சிறுபாண். 175 – 177)

என்ற பாடலடிகள் வழி அறியமுடிகிறது.

பசுக்களின் இனிய பாலை இடையரின் பெண்டிர், 'புதுவிருந்தினரின் மனம் மகிழத் தந்துள்ளனர்' (மலைபடு. 409 - 410). இடையர் வீட்டிற்கு இராக் காலத்தில் வருவோர்க்குப் பாலும் பாற்சோறும் வெண்ணெயும் தந்துள்ளனர். முல்லை நிலத்தார் விருந்தினர்க்காகச் செய்யாது தமக்காகச் செய்ததை வழங்கும் பண்புடையாளராக இருந்துள்ளனர் (மலைபடு. 416 - 417).

வேங்கைப் பூவினைப் போன்ற மூங்கில் அரிசிச் சோற்றில் நெல்லரிசியை விரவி, அவரை விதையால் புளியைக் கரைத்துச் செய்த புளியங்கூழை இரவு உணவாகப் பகற்பொழுதில் பயணம் செய்த வருத்தம் நீங்கும்படி வழங்குவர். இவ் உணவு கழியாற்றெற்றிப் புல் வேய்ந்த குடில்கள் தோறும் வழங்கியதை,

**செவ்வீ வேங்கைப் பூவி னன்ன**
**வேய்கொள் அரிசி மிதவை சொரிந்த**
**சுவல்விளை நெல்லின் அவரையும் புளிங்கூழ்**
**அற்கிடை உழந்தநும் வருத்தம் வீட**
**அகலு ளாங்கட் கழிமிடைந் தியற்றிய**
**புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்** (மலைபடு. 434 – 439)

எனும் பாடலடிகள் இயம்புகின்றன. மேலும் தம் இல்லத்தில் தங்கும் விருந்தினர்க்கு, "பொன்னை நறுக்கியதைப் போல் நுண்ணிய தம்முள் ஒத்த அரிசியுடன் வெள்ளாட்டுத் தசையைச் சேர்த்து ஆக்கிய கருமையான சோற்றுத் திரளில் குளிர்ந்த நெய் விழுதைஇட்டுச் செய்த உணவையும் தினைமாவில் செய்த உணவையும் தினந்தோறும் அளித்துள்ளனர் (மலைபடு. 440 - 445). முல்லை நிலத்து வேடர்கள் விருந்தினர்க்கு 'ஊனையும் கிழங்கையும்' (மலைபடு. 425) வழங்கியுள்ளனர்.

**தோற்படுக்கை**

இடையர்கள் மெல்லிய தலைமயிரை அடைத்த மெத்தையைப் போன்று ஆட்டின் தோல்களை உரித்து ஒன்றாகத் தைத்த வார் மிதித்த தோற்படுக்கையில் உறங்கியுள்ளனர். இரவில் விலங்குகள் வாராதிருக்க நெருப்பைக் கொளுத்தி வைத்துள்ளனர். இதனை,

**துய்ம்மயிர் அடக்கிய சேக்கை அன்ன**
**மெய்யுரித் தியற்றிய மிதியதட் பள்ளித்**
**தீத்துணை யாகச் சேந்தனிர் கழிமின்** (மலைபடு. 418 – 420)
----- ----- ----- **மறிய**
**குளகரை யாத்த குறுங்காற் குரம்பைச்**
**செற்றை வாயிற் செறிகழிக் கதவிற்**
**கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்**
**அதளோன் துஞ்சுங் காப்பின்** (பெரும்பாண். 147 -151)

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன. இதன்மூலம் பண்டைய மக்கள் தோலால் படுக்கை இயற்றிக் கொண்டனர் என்பதையும் இடையர் தம் நிரையில் கொடிய விலங்குகள் புகாமல் இருக்கவும் பனியால் ஏற்படும் குளிரைப் போக்கவும் இரவில் தீ மூட்டினர் என்பதையும் அறியமுடிகிறது. இதனை,

**முன்றிற் கிடந்த பெருங்களி யாளற்கு**
**அதளுண் டாயினும் பாயுண்டா யினும்**
**யாதுண் டாயினும் கொடுமின் வல்லே** (புறம். 317:2-4)

எனும் புறநானூற்றுப் பாடலடிகளும் விளம்புகின்றன.

**புழங்கு பொருட்கள்**

முல்லை நில மக்கள் 'தோற்படுக்கை' (பெரும்பாண்.151, மலைபடு.419), 'தயிர் மத்து' (பெரும்பாண்.159), 'பானை' (பெருபாண்.159), 'சும்மாடு' (பெரும்பாண்.159), 'குழை' (பெரும்பாண்.161), 'தொடுதோல்' (செருப்பு) (பெரும்பாண்.169), 'கோடரி' (பெரும்பாண்.170), 'உறி' (பெரும்பாண்.171), 'காவடி' (பெரும்பாண்.171), 'தீக்கடை கோல்' (பெரும்பாண்.178), 'குதிர்' (பெரும்பாண்.186), 'சிறிய வண்டி' (பெரும்பாண்.188), 'திரிமரம்' (வரகைத் திரிக்கின்ற கருவி) (பெரும்பாண்.187), 'சக்கரம்' (பெரும்பாண்.188), 'கலப்பை' (பெரும்பாண்.188) ஆகிய பொருட்களைப் பயன்படுத்தியுள்ளனர். பால், தயிர், வெண்ணெய், நெய், வரகு, தினை, அவரை, மூங்கில் அரிசி, நெல்லரிசி, புளி முதலானவற்றை உணவு பொருட்களாகப் பயன்படுத்தியுள்ளனர். ஆடு, எருமை, பசு, கன்றுகள் முல்லை நிலத்தாரின் குடிக்குப் பொருளாக இருந்துள்ளன.

**முடிவுகள்**

- முல்லை நிலத்தார் சிறு சிறு குடில்களில் வாழ்ந்துள்ளனர். குடில்களின் மேற்கூரையை வரகு வைக்கோலால் வேய்ந்துள்ளனர். குடில் கதவுகளை மூங்கில் கழிகளால் செறித்துள்ளனர். குடில்களைச் சுற்றி முள்வேலி அமைத்திருந்தனர் ஆநிரைகளின் எரு மிகுதியாகக் காணப்பெற்றது.
- இடைச்சியர் மோரை விற்றுத் தனக்கு வேண்டிய உணவுப் பொருட்களை வாங்கி வந்து தம் சுற்றத்துடன் உண்ணும் பண்புடையராக இருந்துள்ளனர். நெய் விற்ற பணத்தில் பொன்னை வாங்காமல் குடி, தொழில் வளமைக்காக எருமை, பசு, கன்றுகளை வாங்கியுள்ளனர்.
- ஆநிரை மேய்த்தல், உழவிடல், வரகு, அவரை முதலான தானியங்களை விதைத்தல், களை எடுத்தல், அறுவடை செய்தல் முதலான வேளாண்மை சார்ந்த தொழில்களை மேற்கொண்டுள்ளனர்.
- இடையர்கள் தம் குடிசைக்கு வருவோர்க்குத் தினையாலாகிய சிலுத்த சோற்றைப் பாலோடும் வரகுச் சோற்றோடு அவரைப் பருப்பை சேர்த்துச் சமைத்த இன்சுவை சோற்றினையும் இனிய தித்திப்பான புளிக்கறியிட்ட சுடு சோற்றை ஆமான் சூட்டிறைச்சியோடும் பாலும் பாற்சோறும் வெண்ணெயும் மூங்கில் அரிசிச் சோற்றில் நெல்லரிசியை விரவி, அவரை விதையால் புளியைக் கரைத்துச் செய்த புளியங்கூழையும் அரிசியுடன் வெள்ளாட்டுத் தசையைச் சேர்த்து ஆக்கிய கருமையான சோற்றுத் திரளையும் தினைமாவில் செய்த உணவையும் வழங்கியுள்ளனர். முல்லை நிலத்து வேடர்கள் விருந்தினர்க்கு 'ஊனையும் கிழங்கையும்' உணவாகத் தந்துள்ளனர்.
- இடையர்கள் மெல்லிய தலைமயிரை அடைத்த மெத்தையைப் போன்று ஆட்டின் தோல்களை உரித்து ஒன்றாகத் தைத்த வார் மிதித்த தோற்படுக்கையில் உறங்கியுள்ளனர்.
- முல்லை நில மக்கள் 'தோற்படுக்கை', 'தயிர் மத்து', 'பானை', 'சும்மாடு', 'குழை', 'தொடுதோல்' (செருப்பு), 'கோடரி', 'உறி', 'காவடி', 'தீக்கடை கோல்', 'குதிர்', 'சிறிய வண்டி', 'திரிமரம்' (வரகைத் திரிக்கின்ற கருவி), 'சக்கரம்', 'கலப்பை' ஆகிய பொருட்களைப் பயன்படுத்தியுள்ளனர். பால், தயிர், வெண்ணெய், நெய், வரகு, தினை, அவரை, மூங்கிலரிசி, நெல்லரிசி, புளி முதலானவற்றை உணவு பொருட்களாகப் பயன்படுத்தியுள்ளனர். ஆடு, எருமை, பசு, கன்றுகள் முல்லை நிலத்தாரின் குடிக்குரிய பொருளாக இருந்துள்ளன.

**துணைநூற் பட்டியல்**


1. இளம்பூரணர் (உ.ஆ.), **தொல்காப்பியம் பொருளதிகாரம்**, சென்னை : கழக வெளியீடு.
2. சாமிநாதையர் உ. வே. 2014. **புறநானூறு,** சென்னை : டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்.
3. சோமசுந்தரனார் பொ. வே. 2008. **பத்துப்பாட்டு பகுதி 1**, சென்னை : திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்.
4. சோமசுந்தரனார் பொ. வே. 2008. **பத்துப்பாட்டு பகுதி 2**, சென்னை : திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்.

# புறநானூற்றில் வாழ்வியல்சிந்தனைகள்

***டே.எட்வின் சார்லஸ்,** உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூயவளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சி.

உலகம் உவப்பவலன் ஏர்புதிரி தருபலர் புகழ் ஞாயிறு போன்று பண்டைக் காலத் தமிழர் வரலாற்றையும், வாழ்வியல் முறையையும், அறச் செயலையும், ஈதலின் சிறப்பையும், பல வாழ்வியல் நெறிகளையும் நன்கு புலப்படுத்துவது மட்டுமில்லாமல் பழந்தமிழர் பண்பாட்டையும், நாகரீக மேம்பாட்டினையும் எடுத்துக்காட்ட வல்லதாக புறநானூறு அமைந்துள்ளது.

**வாழ்வியல் நெறிகள்**

இவ்வுலக வாழ்க்கையில் மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் அத்தியாவசியமானது நல்ல உடல் நலமும், மனநலமும் தான். ஏழையாய் இருப்பவன் நன்குபணம் சம்பாதித்து தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் காப்பாற்றிக் கொள்ளவும், செல்வம் மிகுந்தவன், அந்தசெல்வத்தை அனுபவிக்கவும், பிறருக்கு கொடுத்து உதவ நல்ல மனநிலையுடன் வாழும் போதுதான் வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படும். வாழ்க்கையில் இன்பம், துன்பம், உயர்வு, தாழ்வு என பல நிலைகள் உண்டு. இதனை எல்லாம் நாம் கடக்கும் போதுதான் வாழ்வில் உன்னதமான நிலையை அடையமுடியும்.

வாழும்பொழுது மனிதன் கடைபிடிக்க வேண்டிய செயல்களையும், கடைபிடிப்பதால் உண்டாகும் நன்மைகளையும் புறநானூறு நமக்கு சுட்டிக் காட்டுகின்றது.

**உலகஒற்றுமை**

**ஒற்றுமையே பலம்** என்ற தொடரின் வலிமையே ஒற்றுமையை பறை சாற்றும்

**"யாதும் ஊரேயாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தரவாரா"** (புறம்:192)

எல்லா ஊரையும் தமது ஊராகவும் எல்லா மக்களையும் தமது உறவினராகக் கொள்ள வேண்டும் என இவ்வரிகள் அறிவுறுத்துகின்றன.

ஒன்றேகுலம், ஒருவனே தேவன் என்ற திருமூலர் வாக்கும் இத்தகையதே ஆகும். அனைவரும் சமம் என்ற கொள்கை இப்பாடலில் வெளிப்படுவதைக் காணாலாம்.

**ஈதல்**

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு"** (திரு:24)

ஈதலறம் எல்லா வகையிலும் சிறப்புடையது என்கிறார் திருவள்ளுவர்.

**"எத்துணைஆயினும் ஈத்தல் நன்றுஎன**
**மறுமைநோக்கிற்றோஅன்றே"** (புறம்:14)

மறு பிறவிக்கு புண்ணியம் கிடைக்கும் என்னும் தன்மையை எதிர் நோக்காது பிறர் வறுமையைப் போக்கிப் பெரும் பொருளைக் கொடுத்தாலே நன்மையுடையது என ஈதலின் சிறப்பின புறநானூறு எடுத்துக்காட்டுகின்றது.

**வாய்மை**

**"புறந்தூய்மைநீரான் அமையும் அகந்தூய்மை**
**வாய்மையால் காணப் படும்."** திரு. (298)

உடம்பு தண்ணீரால் சுத்தமாகும் உள்ளம் உண்மையால் சுத்தமாகும் என்பதுபோல உண்மையை பேசி வாழ வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

வாழ வேண்டும் என்பதற்காக வாய்மை தவறி வாழக்கூடாது என்பதை,

**"வாழ்தல் வேண்டிப்**
**பொய் கூறேன் மெய் கூறுவல்"** (புறம்:139)

உயிர் வாழ்வதற்காகப் பொய் கூறாமல் உண்மையே உரைப்பேன்! ஏன வாய்மையை வலியுறுத்துகிறார். உயிர் வாழவேண்டும் என்பதற்காக பொய்கள் கூறி வாழக்கூடாது என இப்பாடல் வரிகள் சுட்டுகிறன்றனே.

**செய்நன்றி மறவாமை**

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்நன்றி கொன்ற மகற்கு"** (திரு:11)

என திருவள்ளுவம், எந்த நன்றியை மறந்தாலும் ஒருவன் செய்த நன்றியை மறக்ககூடாது என்கிறார்.

**"நிலம்புடை பெயர்வது ஆயினும் ஒருவன்**
**செய்திகொன் றோர்க்குஉய்தி இல்"**

பசுவின் மடியை அறுத்தவர்கள், தாய், தந்தை அறிவு புகட்டிய ஆசிரியரை பழித்து கொடுமை செய்தோரும் என இக்குற்றங்களைவிட, பிறர் செய்த நன்றியை மறந்தவர்க்கு உயர்வே கிடையாது. நன்றியை மறந்தவரை அறம் தண்டித்தே தீரும் என புறம் அறிவூட்டுகின்றது.

**மக்கட் செல்வம்**

**"குறு குறுநடந்துசிறுகைநீட்டி**
**இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்**
**நெய்யுடைஅடிசில் செய்படவிதிர்த்தும்**
**மயக்குறுமக்களை இல்லோர்க்குப்**
**பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே"** (புறம்: 188)

குறுகுறு என்று நடந்துவந்து தன் சிறிய கையை நீட்டி நெய் பிசைந்த சோற்றில் இட்டும், துழாவியும், கவ்வியும், உடம்பில் தேய்த்தும், சிதறியும் பெற்றோரை மகிழச் செய்யும் குழந்தையை பெறாதவர்களுக்கும் தாம் வாழும் நாள் பயனற்றதாகும். இவ்வாறு மழலைகள் பெறுவதால் உண்டாகும் இன்பத்தை இவ்வடிகள் சுட்டிக்காட்டுகின்றன.

**இழிவு உயர்வு**

**"ஈயென இரத்தல் இழிந்தன்று**
**ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று**
**கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்றுஅதனனெதிர்**
**கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"** (புறம்: 204)

ஒருவரிடம் சென்று யாசகம் வேண்டி நிற்றல் இழிவுடையது. அவ்வாறு கேட்ட பின்னர் கொடுக்க மாட்டேன் என்று மறப்பது அதனைவிட இழிவுடையதாம். ஒருவர் கேட்காமலேயே இதனைப் பெற்றுக் கொள் என கொடுப்பதே உயர்வு. அவ்வாறு, கொடுப்பதைப் பெற்றுக் கொள்ளாமல் மறுப்பது அதைவிட உயர்வாகும்

**நற்செயலின் மேன்மை**

**"மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்**
**மாறிப் பிறவார் ஆயினும் இமயத்துக்**
**கோடுயர்ந் தன்னதம்மிசைநட்டுத்**
**தீதில் யாக்கையொடுமாய்தல் தவத் தலையே"** (புறம்: 214)

நல்வினை செய்வார் இம்மையில் புகழும் மறுமையில் இன்பமும் வீடுபெறும் பெறுவர் என்பதால் நல்வினையே தொடர்ந்து செய்யவேண்டும் என புறநானூறு வலியுறுத்துகிறது. உயர்ந்த செயலையே செய்யக் கருதுக என இவ்வரிகள் கூறுகின்றது.

**கல்வியின் சிறப்பு**

**கேடில் விழுச்செல்வம் கல்விஒருவருக்கு**
**மாடல்ல மற்ற யவை** (திரு:40)

ஒருவன் தான் கற்றகல்வி அந்த பிறவி மட்டுமல்லாது ஏழுபிறவிகளிலும் துணை நிற்கும் என்பதால் கற்கவேண்டும் என்பதை

**"உற்றுழிஉதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாதுகற்றல் நன்றே"** (புறம்: 183)

இவ்வாறு கல்வி கற்கவேண்டும் என புறநானூறு கல்வியின் முக்கியத்துவத்தை கூறுகிறது.

**கடமைகள்**

**“ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே”** **(புறம்: 132)**

உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் அவரது நிலைக்கேற்ப ஏதாவதொரு கடமையை ஆற்றவேண்டும். தாய், தந்தை, மகன் என அவரக்குரிய கடமையை சரிவர செய்யவேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொருவரின் கடமைகளை நினைவூட்டி கடமையை சரிவர செய்தால் வெற்றிகிட்டும் என்பதை புறநானூறு அழகாக தெளிவுபடுத்தகிறது.

**பிறர்க்கென வாழ்தல்**

**“உண்டாலமம் இவ்வுலகம் இந்திரா்**
**அமிழ்தம் இயைவதுஆயினும் இனிதுஎனத்**
**தமியா் உண்டலும் இலரே”** (புறம்:182)

தேவா்களுக்குரிய இனிய அமிழ்தமே கிடைத்தாலும் கிடைத்தற்கரிய இது என எண்ணி அதைத் தனித்திருந்துதான் மட்டும் உண்ணாமல் பிறருக்கும் கொடுக்கும் பகுத்துணா்வு வேண்டும் என்பதை இப்பாடல் வலியுறுத்துகிறது.

**முடிவுரை**

நல்லவற்றை செய்யமுடியாமல் போனாலும், அறங்கள் அல்லாதவற்றை, செய்வதைக் கைவிடுவீா்களாக அதுவே எல்லோரும் விரும்புவது என

**“நல்லதுசெய்தல் ஆற்றீா் ஆயினும்**
**அல்லதுசெய்தல் ஓம்புமின்”** (புறம்: 195)

எனபுறம் கூறுகிறது. இவ்வாறு புறநானூறு நம் வாழ்விற்கு தேவையான அடிப்படை தேவைகளையும், பண்பாட்டு உணா்வினையும் தம் மனதில் ஊன்றத் தவறவில்லைபோா் மட்டுமல்லாது பல வாழ்வியல் நெறிகளையும் பண்பாட்டு உணர்வுகளையும் எடுத்துக் கூறுவது புறநானூற்றின் சிறப்புகள் ஆகும்.

**உதவிய நூல்கள்:**


1. புறநானூறு–புலியூர் கேசிகன்,பாரிஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை.
2. திருக்குறள் - மு.வ,பாரிநிலையம், சென்னை.
3. www. Google.com

# கவிஞர் வைரமுத்துவின் திரைப்பாடல்களில் சித்த மருத்துவம்

***பேராசிரியர்.க.நீ.இளங்கோவன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கோபி கலை அறிவியல் கல்லூரி, கோபி - 638453.

**முன்னுரை**

வெகுசன ஊடகங்களில் மக்களைக் கவர்ந்த மாபெரும் சாதனம் திரைப்படம். அத்திரைப்படத்தின் ஒரு கூறான திரையிசைப் பாடல்கள் மக்களிடத்தில் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. அப்பாடல்களில் நல்ல கருத்தோட்டமுள்ள, வாழ்விற்குப் பயன்படக்கூடிய சிந்தனைகளைப் பல கவிஞர்கள் எழுதி வருகின்றனர். சமகாலக் கவிஞர்களின் ஒருவரான கவிஞர் வைரமுத்து அவர்கள் குறிப்பிடத்தக்கவர். திரைப்பாடல்களின் மூலம் புகழ் பெற்ற, புதுமைக் கருத்துகளை முன்னிறுத்துகிற, மூடநம்பிக்கைகளைப் சாடுகிற கவிஞர் வைரமுத்து பல தேசிய, மாநில விருதுகளைப் பெற்றவர்.

**பழைமையை மறவாதவர்**

புதிய கருத்துக்களை உணர்த்திய போதும் பழைய நினைவுகளை நெஞ்சில் நிறுத்துபவர் “புதுமை மலர்வதால் பழமை அடியோடு மறைந்து விடாது. புதுமைக்குள் பழமையின் மணம் வீசிக் கொண்டு தான் இருக்கும்” என்ற சாமி. சிதம்பரனாரின் கூறு இங்கு நினைவு கூறத்தக்கது தற்போது நகர வாழ்க்கையில் வாழ்ந்த போதும் இளம் வயதில் தான் கண்ட, கேட்ட கருத்துக்களைத் தக்க சமயத்தில் பாடல்களில் புகுத்துவதைக் கையாண்டு வருகிறார்.

**சித்த மருத்தவம்**

சித்த மருத்தவம் என்பது தமிழ் மருத்துவம் அல்லது நாட்டு மருத்துவம் என அழைக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் வாழ்ந்த சித்தர் பெருமக்கள் ஆன்மிகச் செய்தியோடு அனுபவ அறிவையும் சமூகத்திற்குத் தந்தவர்கள். தன் உடலையம் வேதியல் மாற்றத்திற்குட்படுத்திய பழங்கால அறிவியலாளர்கள். நாட்டின் தற்ப வெப்ப நிலையை அறிந்து, மலைகளில் வளர்ந்துள்ள மரம், செடி, கொடிகளைக் கொண்டு மக்களுக்கு மருந்துகளைத் தந்தனர். இவர்களின் மருத்துவ முறையைக் கால எல்லைக்குள் வரையறுக்க முடியவில்லை ஆயினும், காலங் கடந்து நிற்கும் நிலைத்த புகழை உடையது.

உண்ணும் உணவை மருந்தாகக் கொண்டு வாழ்ந்த சித்தர்கள் நரை, திரை, மூப்பு, பிணி, சாவு ஆகிய அனைத்தையும் வென்றவர்கள். தான் கண்ட மருந்தியலை “யாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்” என்னும் அருள் நோக்கில் மக்களுக்கு வழங்கியவர்கள். உண்ணும் உணவை அளவாக உண்ண வேண்டும் என்கின்றனர். மிகுதியானால் உடல் உறுப்புகளுக்கு வரும் நோய் உயிரையும் வெளியேறச் செய்கிறது. இக்கருத்தை வள்ளுவப் பெருந்தகை,

**“ ஆற்றால் அளவறிந்து உண்பது அ.்.துடம்பு**
**பெற்றான் நெடிதுய்க்கு மாறு”**

எனக் கூறுகிறார். முன்பு உண்ட உணவு செறித்ததை அறிந்து, பின்னர் உண்ணும் உணவு செறிக்கும் அளவறிந்து உண்டால் நோய்த் துன்பம் ஒருவருக்கும் ஏற்படாது என்கிறார்.

**வைரமுத்துவின் பாடல்களில் சித்த மருந்துவம்**

சித்தர்கள் அருளிய மருத்துவம் நாட்டுப்புற மக்களின் வாழ்வியலில் ஒன்றாகக் கலந்த மருத்துவ முறையாகும். இம்மருத்துவக் குறிப்புகளைப் பாடல்களின் இடையே புகுத்தி மக்களின் நல்வாழ்விற்கு வழிகாட்டியாகிறார் கவிஞர் வைரமுத்து.

**கொத்தமல்லி**

கீரை வகைகளில் கொத்த மல்லியில் இலை, தண்டு, வேர், ஆகிய அனைத்தும் மருத்துவ குணம் கொண்டவை. மேலும்,

**"கொத்துமல்லி வெப்பக் குளிர்காய்ச்சல் பித்த மந்தஞ்**
**சர்ந்தி விக்கல் தாகமொடு தாதுரட்டங் - கத்தியெழும் வாத**
**விகாரமடத் வனகர்த் தமிவிரணம்**
**பூதலத்தில்லாத கற்றும் போற்று"**

எனக் கொத்தமல்லியின் மருத்துவ குணத்தைப் பதார்த்த குணவிளக்கம் எனும் நூல் கூறுகிறது. கொத்தமல்லியின் விதை உடல்சூடு, நடுக்கம், சுரம், பித்தம், உணவு செரிக்காமை, வாந்தி, விக்கல், நாவறட்சி ஆகியவற்றை குணமாக்கும் என்கிறது. இதன் மருத்துவத் தன்மையைக் கவிஞர் வைரமுத்து,

**" கொத்தமல்லி வாங்கிப்பாரு**
**குளிர்ச்சி அதில் உள்ளது – நீ**
**கொமரிப் பொண்ணா எட்டி நில்லு**
**குடும்பத்துக்கே நல்லது"**

எனத் திரைப்பாட்டில் வடிக்கிறார். ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்ணிற்கு எச்சரிக்கைக் குரல் கொடுக்கும் போது மருத்துவ குணம் கொண்ட கொத்த மல்லியைப் பயன்படுத்துகிறார்.

**கீரைத்தண்டு**

குறைந்த செலவில் அதிக அளவில் சத்துக்களைத் தருபவை கீரைகள். இரும்புச் சத்துக்களும் சுண்ணாம்புச் சத்துகளும் அதிகம் கொண்டது. அவ்வாறான கீரைகளைச் சமைக்கும் பெரும்பாலானோர் இதன் தண்டினை ஒதுக்கி விடுகின்றனர். ஆனால் அதிலும் பல வகை மருத்துவத் தன்மையுள்ளது. கீரைத் தண்டு பித்தம் தொடர்பான அனைத்து நோய்களையும் நீக்கும். இது உடலுக்குத் தீங்கு விளைவிக்காத ஒரு உணவு எனலாம். கீரைக் கசாயம், கீரை மசியல், கீரை பொறியல் எனப் பல்வேறு முறைகளில் தயார் செய்து உணவில் சேர்க்கின்றனர். இதனை,

**" தண்டு மெத்த வாயு தணியாத சீதளமாம்**
**விண்டுரைக்கிற் சின்னோய் போம் விள்ளவோ – கொண்டக்கால்**
**நீர்க்கடும்பு வெட்டையனல் நில்லாது நேரிழையே**
**போரக்கடுப்பி ரத்தமும் போம் போம்"**

எனக் கீரைத் தண்டால் வயிற்றுக் கடுப்பு இரத்த பேதி எனப் பல நோய்கள் குணமாகும் என்கிறது பதார்த்த குணவிளக்கம். அவ்வகையில் கவிஞர் வைரமுத்து தம் பாடலில்,

**"வயித்துக்குள்ள சூடிருந்தா**
கீரைத்தண்டு நல்லது"

இங்கு குறிப்பிடப்படும் வயிற்றுச் சூடு என்பது வயிற்றுக் கடுப்பைக் குறிக்கும் அச்சூட்டைக் குறைக்க கீரைத் தண்டு சிறந்த மருந்து என்கிறார்.

**வாழைத் தண்டு**

வாழை மரத்தின் அனைத்து உறுப்புகளும் மருத்துவப் பொருளாகப் பயன்பட்டு நோய் நீக்குகிறது. அதாவது பழத்திலிருந்து நார் வரை வாழைமரம் பல பயன்களைத் தருகின்றது. வாழைத் தண்டு மூலம் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தலாம். இரத்த சோகையை குணப்படுத்தலாம். இது இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபினை அதிகரிக்க உதவுகிறது. சிறுநீரகப் பாதையைத் தூய்மைப்படுத்தலாம். வாழைத் தண்டு சர்க்கரை நோய்க்கு நன் மருந்தாக அமைகிறது. இது உடலில் இன்சுலினை மேம்படுத்த உதவுகிறது. வயிற்றிலுள்ள கொழுப்பைக் குறைக்கும் மொத்தத்தில் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும்,
இதனை,

**வாழை நீர் சீதவெப்பு வல்லபல முண்டாக்கும்**
**பேழை வயிறுகிடக்கும் பெண்மயிலே-வீழுவல்லி**
**ரத்தக் கிரிச்சம் எரிநீர் இவையுடனே**
சிற்றிரணம் போக்கும் தெரி" என வாழையின் பயன்களைப் பட்டியலிடுகிறது பதார்த்த குணவிளக்கம் இதைக் கவிஞர் வைரமுத்து

**"வந்தநீரு பிரியலேன்னா,**
வாழைத்தண்டு நல்லது" எனக் கூறி உடலில் உள்ள கெட்ட நீரை வெளியேற்றி உடலை இளைக்கச் செய்யும் என்கின்றார்.

**புதினா**

புதினாக் கீரையினை நாம் உணவில் வாசனைக்காக மட்டும் சேர்த்து வருகிறோம். ஆனால்அது ஒரு மருத்துவ மூலிகையாகும். புதினாக் கீரையில் நீர்ச்சத்து, புரதம், கொழுப்பு, கார்போஹைட்ரேட், கால்சியம், இரும்புச் சத்து எனப் பல்வேறு சத்துக்கள் அடங்கியுள்ளன. அவை உணவுகளை எளிதில் சீரனிக்க உதவுகிறது.

**அருதி யொரு வாந்தி யக்கினி மந்தங்**
**குருதி யழுக்கு மலக் கொட்ட – விரியுற்**
**துதியதன்று சொறிறங்குத் தொல்லுலகி னாரும்**
**புதியனல்ல மூலி புகல்" என்ற பாடலில்**

புதியன என்னும் மூலிகை மந்தம் குருதி வாந்தி, உடற்சூடு, பித்தம் ஆகியவற்றை நீக்கும் என்கிறது பதார்த்த குணவிளக்கம். இதைக் கவிஞர் வைரமுத்து

**பரம்பரையா பித்தம் வந்தா**
**புதினாகீரை நல்லது" என்கிறார்.**

பரம்பரையாக வரும் பித்த நோய் புதினாக் கீரையால் தீரும் என்கிறார்.

**பாகற்காய் (பாகு + அல் + காய்)**

பாகற்காயில் கசப்புத் தன்மை அதிகமாக உள்ளதால் மிகக் குறைவாக உணவில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் பாகற்காயில் புரோட்டின் மற்றும் வைட்டமின் சத்துக்கள் அதிகமாக உள்ளன. நார்ச்சத்து அதிகமாக உள்ளதால் இரவு உணவுச் செரிமானதிற்குப் பயன்படுகிறது. வயிற்றுள்ள பூச்சியைக் கொல்லும், பசியைத் தூண்டும். மார்பகப் புற்றுநோய் வராமல் தடுக்க பாகற்காய் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது என அமெரிக்க ஆராய்ச்சியாளர் ரத்னாரே கூறியுள்ளார்.

இந்தியாவில் சர்க்கரை நோயின் தாக்கம் அதிகமாக உள்ளது. அதற்குக் காரணம் உணவுப் பழக்கம்.

**உலக அளவில் அரிசி யுத்தம்**

ஆண்டுக்கு 4.5 கிலோ அரிசி ஒரு பிரெஞ்சுக்காரன். 9 கிலோ கொள்கிறான் அமெரிக்கன். 135 கிலோ சாப்பிடுகிறான் இந்தியன் எனக்கூறுகிறார் கவிஞர் வைரமுத்து. "சாதத்துக்குள்ளேயே சமாதியாகிவிடக் கூடாது" எனக் கூறுகிறார்.

அரிசி உணவை அதிகமாக எடுப்பதின் மூலம் சர்க்கரை நோய்க்கு இரையாக நேரிடுகிறது. இந்நோயை பாகற்காய் தீர்ப்பதாக சித்த மருத்துவம் கூறுகிறது.

"மருத்துவம் சக்கர வியாதி வந்தா

பாவக்கா நல்லது" என்ற பாடலடிகளில் கவிஞர் வைரமுத்து பாகற்காயின் மருத்துவ தன்மையை எளிய சொற்களில் பயன்படுத்துகிறார்.

பாவங்களின் மருத்துவப் பலனைக் கூறுகிறது.

**முடிவுரை**

சித்தர்களின் பிறப்பு பற்றித் தூற்றிய காலத்தில் அவர்களின் புகழ் மறைக்கப்பட்டது. எனினும் பிற்காலத்தில் சித்தர்களின் மருத்துவத் தன்மை குறித்த பாடல்களும், அதை எழுதிய சித்தர்களும் பேசப்பட்டனர். படிப்பறிவு இல்லாத பாமரர்களிடம் சென்று சேராத சித்தர்களின் மருத்துவக் குறிப்புகளை, எளிய சொற்களில் திரைப்படங்களின் வழி கொண்டு சென்ற கவிஞர் வைரமுத்து போற்றுதலுக்குரியவர்.

# சங்க இலக்கியங்களில் நாட்டுப்புறமருத்துவ செய்திகள்

***திருமதி.கு.கௌசல்யா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), குற்றாலம் - 627 802.

**முன்னுரை**

சங்க இலக்கியம் என்று கூறப்படுவது சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்த காலத்தை நினைவிற் கொண்டு வழங்கிவரும் பெயர். புலவர்கள் கூடும் பேரவையம் ஒன்றைப் பாண்டிய மன்னர்கள் தம் தலைநகரங்களில் அமைத்துப் போற்றினர். புலவர்கள் பல்வேறு திணைப் பாடல்களைப் பாடித் தொகுத்தும், முன்னரே பாடப் பெற்றிருந்தவற்றைச் சேர்த்துக் காத்தும் பணிபுரிந்தனர் என்பதனை நம்மால் உய்த்துணர முடிகிறது.

சங்கத் தொகைப் பாடல்கள் அனைத்தும் அகம் புறமாகிய திணை பற்றியனவாகும். காலத்தால் முற்பட்ட இத்தமிழ் இலக்கியம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்று தொகுக்கப்பட்டு வரையறைக்கு உட்பட்டதாகும்.

உயிர்கள் தோன்றிய காலத்திலேயே நோய்களும் தோன்றிவிட்டதாகக் கருதலாம். நோய்களைக் கண்ட மனிதன் அதனைப் போக்குவதற்கு முற்பட்டான். அதன் விளைவே மருத்துவ முறை பிறக்கக் காரணமாயிற்று என்று கூறலாம். சங்க காலத்தில் தனி மருத்துவமுறை ஒன்று மருத்துவர்களால் வழங்கப்பட்டதை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**மருத்துவக்கலை**

மருத்துவக்கலை உலகில் ஒரு மகத்தான கலையாக விளங்குகிறது. இதன் வரலாறு இலக்கியங்களிலிருந்தே தோன்றியிருக்கின்றன. இலக்கியங்கள் மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்தவே தோன்றினாலும் சில இலக்கியங்கள் இலக்கிய நயமுடையதாய் காணப் படுகின்றன. இலக்கியங்கள் மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டதால் அம்மனிதனுக்கு வரக்கூடிய இன்ப துன்பங்களிலும் நெறிப்படுத்துதலிலும் இலக்கியம் பெரிதும் பங்கெடுத்துக் கொள்கிறது.

**"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது"**
**(ஔவையார். தனிப்பாடல் திரட்டு.பாடல் எண்.57, பாடல் அடி 2)**

என்கிறார் ஔவை மூதாட்டியார்.

**தமிழ்வழி மருத்துவம்**

தமிழ் மருத்துவர்கள் தேக தத்துவநூல், நோயைப் பற்றிய நூல். நோய் அணுகாவிதி, இரணமருத்துவம், உணவுப்பொருள் மருந்து நூல் முதலிய நூல்களைக் கற்றறிந்த பின்னே மருத்துவம் செய்யத் தகுதி பெற்றனர். இவர்கள் நோயாளரைச் சோதித்தறியும் போது நோய் வந்ததற்குக் காரணத்தைக் காண்பார்கள். பலதரப்பட்ட மக்களுக்கு அவர்தம் நிலத்தியல்பு, உணவு, கல்வி, செய்தொழில் ஆகியவற்றைக் கவனித்தறிந்த பின்பு,

**"நாடியால் முன்னோர் சொன்ன நல்லொலி பரிசத்தாலும்**
**நீடிய விழியினாலும் நின்றநாக் குறிப்பினாலும்**
**வாடிய மேனியாலும் மலமொடு நீரினாலும்**
**சூடிய வியாதி தன்னைச் சுகமுடன் அறிந்த பாரோ"**
**(சே.கணேசன்.இலக்கியத்தில் மருத்துவம்.ப.14)**

என கைநாடி, குரலொலி, உடற்சூடறியத் தொடுதல், கண், நாக்கு, உடம்பின் நிறம், நீர், மலம் இந்த எட்டுவிதச் சோதனைகளையும் செய்த பின்பே மருந்து கொடுக்கப்பட்டது.

**இயற்கை மருந்து தோற்றம்**

தன் உடலில் பட்ட காயம் உடல்வலியைத் தணிக்க ஆதி மனிதன் அருகில் கண்ட பச்சிலையைத் தன்மேனியில் தேய்த்த நாளே இயற்கை மருத்துவத்தின் தொடக்க நாளாகும். பின்னர் பட்டறிவால் அறிந்து பல மாற்றங்களைச் செய்துள்ளான். ஆதி மனிதன் இயற்கையைத் தான் முதலில் மருந்தாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். அவைதான் எளிதில் கிடைப்பன

மனிதனுக்கு தீங்கு செய்யாதன. சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் இயற்கை மருந்து குறித்துக் குறிப்பிடுகின்றது.

**மருந்தே உணவு**

சங்ககால மகளிர் மருத்துவ குணம் கொண்ட மூலிகைகளை சமையலுக்கு உணவாக பயன்படுத்தியுள்ளனர்.

குறுந்தொகையில் புறப்பணிக்காகப் பிரிந்த தலைவன் வந்து சேராதது கண்டு தலைவி வருந்துகிறாள். இளவேனிற்காலம் வந்ததையுற்று உள்ளம் வெதும்புகிறாள். வீட்டு முற்றத்தில் வேம்பு பூத்துக் குலுங்கி ஆண்டின் புதிய வருவாயினை அறிவித்தது. அப்பூவினைக்கொய்து விடாமலும், வேம்பின் பூக்கொண்டு சாறு வைக்காமலும் பூக்கள் வீணாவதை தலைவியால் தாங்க முடியவில்லை.

**"கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்**
**என்ற இன்றியும் கழிவது கொல்லோ" (குறுந். 24.11-12)**

இவ்வரிகளின் மூலம் வேம்பினை குழம்பு செய்து உண்டனர் என்ற செய்தியினை அறிந்து கொள்ள முடிகிறது. வேம்பின் அனைத்து பாகங்களும் மருத்துவ குணம் கொண்டவை. இது சுரம், நீர்க்கோவை, காமாலை, குன்மம், வாய்வு போன்ற அனைத்தும் நீங்கக் காரணமாகிறது. சங்ககால மகளிர் வேம்பின் பூவை சமையல் செய்து உண்டதன் மூலம் மூலிகைகளை சமையலில் பயன்படுத்தி உள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

அகநானூற்றில் கொள்ளோடு பயிறும் பாலும் சேர்த்துப் பாற்சோறு உண்ட செய்தி இடம்பெறுகிறது.

**"கொள்ளொடு பயிறு பால் விரைஇ வெள்ளிக்**
**கோல்வரைந்தன்ன வால் அவிழ் மிதவை" (அகம். 37.12-13)**

கொள் என்னும் பயிறு சிறந்த மருத்துவ குணம் கொண்டதாகும். இப்பயிறு ஊட்டச்சத்து மிக்க உணவு என்பதுடன் எலும்புருக்கி நோய்க்கு நல்ல மருந்தாகும். "கொள்" பயிறுடன் பால் சேர்த்து அவித்து உண்டால் எலும்புருக்கி நோய் குணமாகும். சங்ககாலத்தில் மருத்துவ குணம் கொண்ட பயிறான கொள்ளினை சமையல் செய்து உண்டுள்ளனர் என்பதை பாடல்வழியாக அறியமுடிகிறது. மேலும், வேளைமரத்தின் பூவின் சிறப்பினை புறநானூறு மகளிர் அறிந்திருந்தனர்.

ஆயர் மகளிர் இதன் பூக்களை தயிரில் இட்டுப் பிசைந்து, புளிமிதவை செய்துள்ளனர்.

**"வேளை வெண்பூ தயிர்க் கொள்இ**
**ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை" (புறம். 215.3-4)**

இப்பாடல்வரிகள் மூலம் வேளை மலரை உணவாக பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. வேளை மலரின் சாறு ஒற்றைத் தலைவலியைப் போக்கும் மருத்துவ குணம் கொண்டதாகும்.

வேளை மலர், இஞ்சி இரண்டின் சாறையும் ஒரு சங்கு குடித்தால் ஒற்றைத் தலைவலி குணமாகி விடும் என்பது நாட்டுப்புற மருத்துவமாகும். சங்ககால மகளிர் வேளை மலர்களை உணவாக பயன்படுத்தியுள்ளனர் என்பதை இதன்மூலம் அறியமுடிகின்றது.

ஔவைக்கு அதியமான் நெல்லிக்கனி ஒன்றைக் கொடுத்தபோது ஔவை மகிழ்ந்து,

**"பெருமலைவிடரகத்து அருமிசைக் கொண்ட**
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**
**ஆதல் நின்னகத்து அடங்கிச்**
**சாதல் நீங்க எமக்கீத்தனையே புறம்"**
**(உ.வே.சா. புறநானூறு மூலம் உரையும், ப. 486)**

நெல்லிக்கனி சிறந்த மருத்துவகுணம் கொண்டதாகும். நெல்லிக்காயில் இரும்புச் சத்து மிகுந்துள்ளது. காட்டு நெல்லி, அரிநெல்லி என இருவகையுண்டு. இரண்டும் மருத்துவ குணம் கொண்டதாகும். ஔவையும், நெல்லிக்கனியின் சிறப்பினைக் கூறாமல் சாதல் நீங்க அருநெல்லிக் கனியை அளித்தான் என்று கூறியுள்ளார். எனவே சங்ககாலத்தில் சாதல் நீங்கும் அருமருந்தாக நெல்லிக்கனியினை உண்டுள்ளனர் என்பதனை அறியமுடிகிறது.

**மூலிகைத் தைலம்**

சங்க இலக்கியத்தில் உள்ள பாடல்களில் ஔவையார் பாடிய மற்றொரு பாடலில் மருத்துவச் செய்தி காணப்படுகின்றது. இதனை,

**"நாற்றம் நாளும் தன்மையால்**
**புலவு நானும் என் தலை தைவரும் மன்னே புறம்"**

என்ற பாடலில் நரந்தம் புல்லின் இருந்து தைலம் எடுத்து எகிப்து நாட்டிற்கு அனுப்பினார். புலல் உண்டபின் அத்தைலத்தால் கை கழுவினர். அதியமானும் நரந்தம் நாறும் கையினை உடையவன். எகிப்து நாட்டிலிருந்து நரந்தம் நல்லதொரு மருந்தென்பதனை எட்டுத்தொகையில் உள்ள புறநானூற்றில் உள்ள பாடல் வரிகளின் வழி அறியமுடிகின்றது.

**சங்க கால மருத்துவர்கள்**

சங்க காலத்தில் மருத்துவப் புலவர்கள் பலர் இருந்திருக்கின்றனர். அவர்களில் சிலர் மருந்துப்பொருட்களில் பெயராலேயே தங்கள் பெயரைச் சூடியுள்ளனர் என்பதை கடுகு

பெருந்தேவனார், போந்தைப்(பனை)பசலையார், வெள்ளெருக்கிலை காவட்டனார் (காவட்டப்புல்) போன்ற பெயர்கள் மூலம் அறியலாம். மருந்துப் பெயரைச் சூடாதவர் களாக தாமோதரனார் நல்லச்சுதனார், கபிலர், கணிமேதாவியார் போன்ற புலவர்கள் இருந்துள்ளதை அறிய முடிகிறது.

**மகளிருக்கான நோய்கள்**

நோயும், மருத்துவமும் மனித இனவரலாற்றில் பிரிக்க முடியாதவையாக உள்ளன. சங்க அக இலக்கியங்களில் பல வகையான நோய்களும், அவற்றிற்கான மருத்துவ முறைகளும் இருக்கின்றன. மகளிருக்கான நோய்கள் சிலவற்றை சங்க அக இலக்கியங்கள் இயம்புகின்றன.

**மகப்பேறு காலம்:-**

பெண் கருவுற்ற காலத்தில் ஏற்படும் மாற்றங்களாக சங்க கால புலவர்கள் கூறுவன. தற்கால மருத்துவர்களின் கருத்தோடு ஓரளவு இணைந்து செல்கிறது.

கருவுற்ற பெண்டிர் புளிச்சுவையை விரும்புவர் என ஐங்குநுறூறு கூறுகின்றது.

**"முந்நால் திங்கள் நிறைபொறுத்து அசைஇ**
**ஒதுங்கல் செல்வாப் பசும்புளி வேட்கைக்**
**கடுஞ்சூழ் மகளிர் போல நீர் கொண்டு"**

**(குறுந்தொகை.பாடல் எண்.287.பாடல் அடிகள்3-5)**

பன்னிரு திங்களாகக் கருப்பச் சுமையைத் தாங்கித் தளர்ந்து, நடக்கவும் மாட்டாராய்ப் பச்சைப்புளியைத் தின்னும் விருப்பத்தைக் கொண்டிருக்கின்றவராய் முதற் சூலை யுடைய மகளிர் பலரும் விளங்குவர் என்கிறது குறுந்தொகை. கருவுற்ற காலத்தில் வயிற்றில் குமட்டலும், எரிச்சலும் உண்டாகும். இக்காரத் தன்மையைக் கட்டுப் படுத்தவே புளிச்சுவை விரும்பப்படுகின்றது.

**மகப்பேறு வடு நீக்கும் மருந்து:-**

பிள்ளை பெற்ற மகளிர் நெய்யுடன் சிறுவெண் கடுகையும் அரைத்து உடம்பில் பூசுவர். இதனால் பிள்ளைப் பேற்றினால் உண்டாகும் வடுக்கள் நீங்கும் என்பதை,

**"ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப்**
**பசுநெய் கூர்த்த மென்மை யாக்கைச்**
**சீர்கெழு மடந்தை"**

**(நற்றிணை. பாடல் எண். 40. பாடல் அடிகள் 7-9)**

என வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன. சிறப்புமிக்க தலைவி வெண் சிறுகடுகு அணிந்த நெய்யாட்டு நிறைவேறிய அண்மைக் காலத்தில் பசிய நெய் விளங்கும் மெல்லிய உடம்போடு காணப்பட்டாள் என்று கூறுவதன் மூலம் மகப்பேறு வடுவிற்கு கடுகையும் நெய்யையும் பயன்படுத்தினார்கள் என அறிய முடிகின்றது.

**நீர் வேட்கை தீர்க்கும் மருந்து:-**

நெல்லிக்காய் உடலில் நீர் வற்றிப் போகும் நிலையில் அதனை நிவிர்த்தி செய்யும் சக்தி உண்டு என்று அக்கால மக்கள் நம்பினர். இது உயிரை வலிமையாக்கும் ஆற்றல் உடையது இதனை,

**"நெடுஞ்சேன் வற்ற நீர் நசை வம்பலர்**
**செல்லுயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லி"**

**(அகநானூறு.பாடல்எண்.271.பாடல்அடிகள் 6-7)**

என்கின்றது அகநானூறு.

**முடிவுரை**

சங்ககாலத் தமிழ் இலக்கியங்களில் தமிழகத்தில் தனி மருத்துவமுறை ஒன்று வழங்கப் பட்டதை அறியமுடிகினறது. சங்க நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றில் அறுவை சிகிச்சை முறைகள் பலவற்றை பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறியமுடிகின்றது. நம் இலக்கியங்களில் உள்ள மருத்துவ செய்திகளை ஆராய்ந்தால் பல வியக்கத்தகும் பல மருத்து உண்மைகளை அறியலாம்.

தமிழர் இயற்கையால் பெற்ற பயன் மிகுதி. இயற்கை மூலம் எல்லா வளங்களையும் பெறுகின்றோம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இயற்கையின் ஒவ்வொரு மரத்திலும், ஒவ்வொரு செடியிலும், கொடியிலும் ஒவ்வொரு மருத்துவக் குணம் அமைந்துள்ளது. இவ்இயற்கையின் பயன்களை நன்கு அறிந்த சங்கத் தமிழர் அவற்றைப் பேணிப் பாதுகாத்தனர். புலவர்கள் தம் பாடல்களில் அவற்றைப் பாடி வைத்தனர்.

இன்றைய உலகில் நாகரிக வளர்ச்சியின் காரணமாக இன்றைய அறிவியல் மிக வேகமாக வளர்ந்து வந்தாலும் இன்றைய மருத்துவத் துறைக்கு வித்திட்டது நம் பண்டைத் தமிழரின் மருத்துவ அறிவே ஆகும். இயற்கையை மருந்தாகக் கொண்ட மருத்துவ முறைகளை சங்க இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன என்பதையும் இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகின்றது.

# மலைபடுகடாமில் கானவர் வாழ்வியல் சிந்தனைகள்

*அ.கிரேஸி ஜெனோவா, தமிழ்த்துறை, தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி), மஞ்சக்குப்பம், கடலூர் - 1.

**முன்னுரை**

வாழ்வியல் என்புத பிறப்பு முதலாக இறப்பு வரையிலான நிகழ்வுகளை உள்ளடக்கியது. அதன் நிலைப்பாடுகள் பல நிலைகளில் மாற்றம் பெற்றதாகவும், மனிதனுடைய அனுபவங்களும் மரபு, பண்பாடு என தொடர்வினை செயல்பாடுகளைக் கொண்டதாகவும் அமைகிறது. ஆவை பல்வேறு பிரச்சனைகள் மற்றும் தொடர் போராட்டங்களும் கொண்ட வாழ்வியல் அமைப்பாக செயல்படுகிறது. விழாக்கள், சடங்குகள், நம்பிக்கை, அறம், போர், ஈதல் என அகம், புறம் சார்ந்த அனைத்து கூறுகளையும் கொண்டதாக வாழ்வியல் விளங்கப் பெறுகிறது. தமிழகத்தின் ஏனைய நிலமக்களோடு சரிசமமாக மதிக்கப்பட்டு பெரும் புலவர்களால் உணர்ச்சிப் பொங்கப் பாடிபோற்றப்பட்ட குறிஞ்சிநில மக்களின் வாரிசுகளான கானவர்களின் வாழ்வியலை வெளிக்கொணரும் பொருட்டும், அவர்களின் வாழ்வியல் அறங்களை ஆராய்ந்தறியும் பொருட்டும் மலைபடுகடாம் வாயிலாக இக்கட்டுரை அமையப்பெறுகிறது.

**கானவர்களின் வாழ்வியல்**

காடுகளில் வாழும் கானவர்களின் வாழ்வியல் முறையைக் காணும்போது மற்ற நிலங்களில் மாறுபட்டதாகவே அமைகின்றது. மேலும், அவர்களின் வாழ்க்கை பல இன்னல்கள் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. இவர்கள் விலங்கினங்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டு, மனமகிழ்ச்சி நிறைந்தவர்களாக வாழ்ந்திருக்கின்றனர். தமக்கென்று தனித்த வாழ்வியல் அறங்களை வகுத்துக் கொண்டு, பண்பாடு சார்ந்த வாழ்வியலை மேற்கொண்டவர்களாக இருந்திருப்பதை சங்க இலக்கியங்களின் வழி அறிய முடிகின்றது. தொடக்ககால மக்களின் புகலிடமாக காடுகள் இருந்ததினால் தான், மனிதன் அங்கு வாழமுடியும் என்று பக்குவப்பட்டான். ஆகவேதான் கானவர்களின் வாழ்க்கை முறை இயற்கையோடு இயைந்தவையாக அமைகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**இயற்கையும் கானவர்களும்**

வாழ்வியல் நிகழ்வுகளில் பல்வேறு கூறுகளை மையமாகக் கொண்டு வாழ்ந்த இவர்கள் இயற்கையை வணங்குதல், போற்றுதல், பாதுகாத்தல், வாழ்த்துதல் போன்ற பண்புகளில் சிறந்து விளங்கினர். இதை மலைபடு கடாமில்

**‘மிகுவளம் பழுநியயாணர் வைப் பின்**
**புதுவதுவந்தன்று இதுவதன் பண்பே**
**வானம் மின்னுவசிவுபொழியஆனாது**
**இட்டஎல்லாம் பெட்டாங்குவிளைய” (வரிகள் 95 - 98)**

கானவர்கள் இருக்கின்ற ஊர்மிகுதியான செல்வம் நிறைந்ததும், புதுவருவாய் உடையதாகிய ஊராகவும் இருந்தன. மின்னல் மின்னிமழை பெய்வதனால் நிலத்தில் இட்ட விதைகள் எல்லாம் இவர்கள் விரும்பிய வண்ணம் விளைந்து பயன் தந்தன. மழைபெய்தல் தாங்கிய அகன்ற பெரிய கொல்லை நிலமாக இருந்ததை பாடலின் வழி அறியமுடிகிறது. இயற்கை கூட இவர்களுக்கு ஏற்றாற்போல் இசைந்த தன்மையை உணரச் செய்கின்றது.

**கானவர்களின் உணவும் கள்ளுண்ணுதலும்**

கானவ மகளிர் உணவு சமைப்பதற்குச் சில நேர்த்தியான முறைகளையும் கையாண்டுள்ளனர். நறவு எனும் நெல்லால் வடித்தவற்றைக் கொண்டு கள்ளும், வால் அவிழ் வல்சி எனும் வெண்மையான சோறு போன்றவற்றையும் செய்துள்ள செய்திகளை மலைபடுகடாம் பதிவு செய்துள்ளது.

**‘கழைவளர் நெல்லின் அரிஉலைஊழ்த்து**
**வழைஅமல் சாரல் கமழத் துழைஇ**

நறுமலர் அணிந்தநாறுஇரு மூச்சிக்
குறமகள் ஆக்கிய வால் அவிழ் வல்சி" (வரிகள் 180 - 183)

மலைப் பொருள்களுடன் மூங்கில் குழாய்க்குள் பெய்யப் பெற்றதேனால் செய்தகள்ளின் தெளிவுமற்றும் காலையில் நெல்லால் வடிக்கப் பெற்றகள்ளையும் உண்டு களித்துள்ளனர். மனமகிழ்ச்சியின் பொருட்டு விடியற்காலத்தே கள்ளுண்டு களித்தலை.

'நறவுநாட்செய்தகுறவர் தன் பெண்டிரோடு" (வரி - 320)

என்ற பாடலடியின் மூலம் கானவர்கள் வேட்டைக்குச் செல்லும் பொழுதும், வேலையில்லாத பொழுதும் கள்ளுண்டு களித்துள்ளனர் என்பதை உணர்த்துகிறது.

**கானவர் குடியின் இயல்பு**

"வெறிக்களம் கடுக்கும் வியல் அறைதோறும்
மணஇல் கமழும் மாமலைச் சாரல்" (வரி - 150 - 151)

கானவர் குடியின் இயல்பும், அவர்கள் வழங்கும் உணவுப் பொருட்களைப் பற்றியும் காணும்போது, வெறியாடுகளம்,பலரும் கூடுவதற்கு ஏற்றவாறு அகன்ற இடமாக விளங்குகிறது. வேலனை அழைத்து வெறியாட்டு எடுக்கும் விழாகளத்தில் உதிர்ந்து கிடக்கும் மலர்களைப் போலகாந்தள் மலர்கள் பாறைகளில் வீழ்ந்து கிடக்கும். மலைச்சாரலில் எங்கும் மலர்ந்த மலர்களால் கமழும் மணமானது, மனைகளில் விளங்கும் மணம் போன்றதாக அமைவதை இப்பாடல் உணர்த்துகிறது.

**கானவர்களின் விருந்தோம்பும் பண்பு**

தமிழ் இலக்கியங்களில் விருந்தோம்பல் பற்றிய செய்திகள் தொடர்ந்து இடம் பெறுவதைக் காணமுடிகிறது. தானம், கொடை, ஈகை என இவற்றை சிறந்த அறமாகவே தமிழர்கள் போற்றியுள்ளனர். இருப்பினும் விருந்தோம்பல் அறச்செயலாக இருந்து வந்துள்ளது. தன் இல்லத்திற்கு வரும் விருந்தினருக்கு விருந்து அளித்தல் என்பது எல்லாவற்றிற்கும் மேலான விழுமியமாக தமிழர்கள் கருதியுள்ளனர். இதில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற திணை வேறுபாடு இல்லாமல் அவரவர்களின் அளவிற்கு விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கியுள்ளனர். முல்லை நிலமக்களின் விருந்தோம்பல் என்பது சற்று விரைவாக செய்யக்கூடிய தன்மையை உடையது என மலைபடுகடாமில்

'நிலைத்துறைவழீஇயமதனழிமாக்கள்
புனல்படுபூசலின் விரைந்துவல் எய்தி
உண்டற்கு இனியபழனும் கண்டோர்
மலைதற்கு இனியபூவும் காட்டி" (வரிகள் 280 - 283)

கூட்டமாக நின்று இசைக்கருவியை இசைத்தால் இசையின் ஒலியைக் கேட்டுகாட்டில் வாழும் கானவர்கள் நீரில் விழுந்தவர்களின் துன்பமறிந்து அவர்களைக் காப்பாற்ற விரைவது போன்று விரைந்து வந்து விருந்தோம்பலைச் செய்தனர். கானகத்தில் கிடைக்கும் கனிகளை உணவாக அளித்து உண்ணச் செய்து மனமகிழ்வு அடைந்தனர். அதோடு பூக்களையும் கொடுத்து மகிழ்ந்தனர். மேலும், மூங்கிலரிசிச் சோற்றையும் புலால் உணவையும் இரவு உணவாகக் கொள்வர். ஆட்டிறைச்சியோடு நெய் கலந்த சோற்றை வெள்ளெலியின் இறைச்சியோடு உண்ணுவார்கள். கானவர்கள் வீட்டில் கிடைக்கும் உணவினை அவர்களிடம் பெற்று உண்டு அவர்களின் வீட்டில் தங்கிக் கழித்து மறுநாள் செல்வர். அவர்கள் அடுத்தவர்களிடம்

'பரூஉக்குறைபொழிந்தநெய்க்கண்வேவையோடு
குரூஉக்கன் இறடிப் பொம்மல் பெறுகுவிர்" (வரிகள் 168-169)

என்ற பாடலில், கானவர்கள் நெய்யில் வெந்த தசைப் பொறியலுடன் நிறமுடையத் தினைச் சோற்றை உமக்குத் தருவார்கள். இவ்வாறு கானவர்கள் தமக்குக் கிடைத்த சிறிய உணவாக இருந்தாலும் அதனைப் பகிர்ந்து உண்ணும் குணமுடையவர்களாகக் கருதப்பட்டனர். விருந்தோம்பலுக்குச் சிறப்புப் பெற்றவர்கள் கானவர்கள் என்பதனை அறியலாம்.

**தொழில்கள்**

**தேன் எடுத்தல்**

கானகத்தில் உள்ள மரங்களில் கானவர்கள் தேன் எடுக்கும் கலையை நன்கு அறிந்தவர்கள். பண்டைய காலமக்களின் மருத்துவ முறையில் தேன் முக்கிய இடத்தை வகித்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

'கலைகையற்றகாண்பின் நெடுவரை
நிலைபெய் திட்டமால்புநெறி ஆக
பெரும்பயன்தொகுத்ததேம் கொள்கொள்ளை
அருங்குறும்புஎறிந்தகானவர் உவகை" (வரிகள் 315-318)

இவர்கள் தேனை உணவிற்காக எடுத்திருந்தாலும் அது கொள்ளை அடித்து பெறப்பட்டது என்ற உண்மைச் செய்தியை இப்பாடல் பதிவு செய்கிறது. கானவர்கள் முசுக்கலை குரங்கே ஏறமுடியாது என கைவிடப்பட்ட மலைஉச்சியில் தங்களின் கூர்மையான பார்வையைக் கொண்டு ஏறித் தேன்எடுத்து உவகையில் ஒலி எழுப்பி மகிழ்ந்துள்ளனர்.

**கிழங்குஅகழ்தல்**

**'வயவுப்படிமுழந்தாள் கடுப்பக்குழிதொறும்**
**விழுமின் வீழ்ந்தனகொழுங் கொடிக்கவலை"**

என்ற பாடலின் மூலம் கிழங்குகள் மாவின் தன்மையைப் பெற்று பெண்யானையின் முழங்காலைப் போன்று குழிகள் தோறும் வளமாக நிலத்தில் விளைந்தன. கிழங்குகளைத் தன் கொம்புகளால் குத்தி எடுக்கும் பன்றியிடமிருந்து பாதுகாக்க கானவர் போராடி கிழங்கு எடுப்பதற்காகப் பெரிய குழிகளைத் தோண்டி எடுப்பார்கள். இவ்வாறு பல இடர்களையும் தாண்டி உணவுப் பொருள்களை ஈட்டி தொழிலில் சிறந்து விளங்கினர் என்பதை அறியமுடிகிறது.

**வாழ்வியல் சிக்கல்கள்**

கானவர்களின் வாழ்க்கைச் சூழலானது அச்சம் நிறைந்தது மற்றும் தொடர் போராட்டங்கள் நிறைந்தது என்பதை மலைப்படுகடாமில் கானவர்களின் இருப்பிடச் சூழல் காட்டுகிறது.

**'விளைபுனம் நிழத்தலின் கேழல் அஞ்சி**
**புழைதொறும் மாட்டிய இருங்கல் அடாஅர்**
**அரும் பொறிஉடையஆறே".** (வரி 193 - 195)

கானகப் பகுதியில் பன்றிகளை விரட்டும் பொருட்டு பொறிகள் அமைத்துள்ளனர். மலைப்பகுதிகளில் விளைந்துள்ள தினைக்கதிர்களை உண்ணவரும் காட்டுப் பன்றிகளைப் பிடிப்பதற்காக சிறிய இராப் பொழுதில் செலவு மேற்கொண்டால், அக்காட்டுப் பன்றிகளாலும், அவற்றைப் பிடிப்பதற்காக இட்டுவைத்துள்ள பொறிகளாலும் ஏதம் விளையும் என்பர்.

**'கரந்துபாம்பொடுங்கும் பயம்புமார் உளவே"** (வரி 199)

பாம்பு ஒடுங்கும் குழிகள் மக்கள் நடமாட்டம் இல்லாத வழிகளில் இருந்ததையும் அவை மனிதருக்கு மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியதையும் உணர்த்துகிறது.

**'அகல் மலை இரும்பில் துவன்றியயானைப்**
**பகல்நிலைதளர்க்கும் கவண் உமிழ் கடுங்கல்"** (வரி 205-206)

குறவர்கள் தினைப் புனத்தைக் காப்பதற்கு மேடான பகுதியில் ஏறிநின்று யானைக் கூட்டத்தை நிலைகுலையச் செய்யும் பொருட்டு கவண்கல்லை பயன்படுத்தி விரட்டியுள்ளனர். அச்சமயம் யானைகளிடமிருந்து தன்னையும் பாதுகாத்துக் கொண்டு மிகுந்த ஓசை எழுப்பியும் ஆரவாரித்தும் வாழும் இன்னல்கள் நிறைந்த வாழ்வை மேற்கொண்டுள்ளனர். இவர்களுக்கு நிலையான மற்றும் நிரந்தரமான வாழ்க்கைச் சூழல் வாய்க்கப் பெறவில்லை.

**முடிவுரை**

மலைபடுகடாம் வழி கானவர்களின் வாழ்வியலை ஆராயும் போது அவர்களின் வாழ்க்கைச் சூழல் காடும் காடு சார்ந்த இடமாக இருந்திருப்பதை அறியமுடிகிறது. கானவர்களின் வாழ்வியல் முறை இயற்கையோடு இயைந்த வாழ்க்கையாக இருந்திருப்பதையும் சூழலுக்கு ஏற்றார் போல் தம்மை மாற்றிக் கொண்டு வாழ்வை மேற்கொள்பவர்களாக இருந்து உள்ளனர் என்பதையும் உணரமுடிகிறது.

அறப்பண்புகள் நிறைந்த இவர்கள் உணவு உண்டு, கள்ளுண்டு களித்திருப்பதையும் மலைப்படுகடாமின் வழி அறிலாம். மேலும் இவர்களின் தொழிலான தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் ஆகியவற்றில் சிறந்து விளங்கியதோடு விலங்குகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டு வாழ்தல் என வாழ்வியல் பண்புகளில் கானவர்கள் சிறந்துள்ளனர். மேலும், கானவர்களின் வாழ்வியல், போராட்டங்கள் நிறைந்ததாக இருந்தாலும் மனமகிழ்வுடனும், பொழுதுபோக்குடனும் தங்கள் வாழ்வை கழித்துள்ளனர் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகின்றது.

**அடிக்குறிப்பு**


1. பத்துப்பாட்டு மூலமும் உரையும் (பகுதி - 2) நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ்
2. ஆய்வுக்கோவை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் 2017
3. சங்க இலக்கிய உரை பத்துப்பாட்டு அறிஞர் ச.வே. சுப்ரமணியம். மணிவாசர் பதிப்பகம், சென்னை.
4. சங்க இலக்கியசால்பு - முனைவர். நிர்மலாமோகன், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

# சங்க அக இலக்கியங்களில் அழகியல்

***க.செ.ஜெயலட்சுமி,** முனைவர் பட்ட ஆய்வாளர், ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருநெல்வேலி - 627 012.

**முன்னுரை**

மனிதன் அழகியலுணர்வு மிகுந்தவன். இயற்கையோடு இயைந்தும் அதனைத் தனக்கேற்ப இயைவித்தும் வாழும் போது அனைத்திலும் அழகியலுணர்வை வெளிப்படுத்துகின்றான். அவனது ஒவ்வொரு படைப்பிலும் அழகு வெளிப்பட்டு மிளிர்கிறது. அகம் சார்ந்த வாழ்வியல் சார்ந்த உண்மைகளை அவன் தன் படைப்பாக்கத்தில் வெளிப்படுத்தும் போது அழகியல் மேலும் சிறப்படைகின்றது. தலைமுறைகள் மாறினாலும் அவ்வக் காலத்தே நிகழ்ந்த படைப்புகளும் அதன் அழகியல் உண்மைகளும் நிலைத்து நிற்கின்றன.

ஆங்கிலத்தில் 'யுநளவாநவைஉள' என்று வழங்கும் சொல்லின் ஆக்கமே 'அழகியல் அல்லது முருகியல்' என்று தமிழில் வழங்கப்படுகிறது. இதனை எழில்கலை என்றும் கூறுவர். இலக்கியத் திறனாய்வாளர்கள் அழகியலை ஒரு கலைத்துறையாக வளர்த்து வந்துள்ளனர். அழகியல் என்ற சொல்லுக்கு அறிஞர்கள் பலர் வரைவிலக்கணம் கூறியுள்ளனர். இவ்வாறாக, சங்க அக இலக்கியங்களில் அழகியல் என்ற சொல்லின் இடம் என்ன என்பதை விரிவாக விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**அழகியல் - விளக்கம்**

அழகியல் என்பது அழகு வாய்ந்த ஒரு பொருளைக் காணும் போதோ அல்லது அழகான முறையில் ஒரு கருத்தினை வெளியிடும் போதோ ஏற்படும் உணர்ச்சியாகும். மக்களின் சுவைத்தல் தன்மை வேறுபட்டிருப்பதால் எல்லோருக்கும் ஒரே வகையில் இவ்வுணர்ச்சி தோன்றாது. உள்ளத்தின் பண்பாட்டைப் பொறுத்து அழகுணர்ச்சி அமைகிறது. அழகுள்ளவை எல்லோரையும் தன்பால் ஈர்க்கும் தன்மை உடையது. எனவே, அவற்றைச் சுவைக்கும் அறிவை அளிக்கக்கூடிய அழகுணர்வு என்பதும் சுவையான ஒன்றாகும். மேலும், அழகியல் பற்றி கிரேக்க அறிஞர் பிளட்டோ,

**"அழகைப் பற்றிய உணர்ச்சிப்பூர்வமான அறிவே அழகியலாகும். உலகில் காணப்படும் காட்சிகளின் அழகினை உய்த்துணர்தலே அழகியலுக்கு அடிப்படை"** 1

என்று குறிப்பிடுகின்றார்.

**தமிழ் இலக்கணங்களில் அழகியல் குறித்த செய்திகள்**

மானுடப் பண்பாட்டு கோலத்தின் வெளிப்பாடாக அமைவன கலைகளும், இலக்கியங்களுமேயாகும். அந்த வகையில் தமிழர் பண்பாடு என்பது மொழியை மையப்படுத்தி அமைகிறது. மொழியை ஊடகமாகக் கொண்ட இலக்கியம் சமூக உணர்வுகளையும் உணர்ச்சி சிந்தனைகளையும் வெளிப்படுத்துவனவாக உள்ளது. தமிழர் அழகியலுக்கு அடித்தளமாக அமைபவை இலக்கியங்கள். பண்டைக் காலத்தில் தமிழில் தோன்றிய இலக்கணங்களும் தமிழர் வாழ்க்கை முறை, பண்பாடு, கலை மரபு, அழகியல் ரசனை பற்றிக் கூறுவனவாக உள்ளன.

**தொல்காப்பியத்தில் அழகியல்**

தமிழ் மொழியின் தொன்மை இலக்கணமான தொல்காப்பியத்தில் 'அழகு' என்ற சொல் பொருளதிகாரச் செய்யுளியலில் செய்யுட்குரிய உறுப்புகளுள் ஒரு இலக்கிய வகையாகச் சொல்லப்பட்டுள்ளது.

**"செய்யுள் மொழியால் சீர்புனைந் தியாப்பின**
**அவ்வகைதானே அழகெனப் படுமே"** 2 **(இளம்., பொருள்., 537)**

இது தவிர அழகு என்ற பொருள் தரக்கூடிய ஏர், எழில் என்ற சொற்கள் பொருளியலில்,

**"ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா**
**கற்பும் ஏரும் எழிலும் என்றா**
**சாயலும் நாணும் மடனும் என்றா**
**……………………………………..**
**நாட்டியல் மரபின் நெஞ்சுகொளின் அல்லது**
**காட்ட லாகாப் பொருள என்ப"** **(நூற்பா, 51)**

என்பதில் இடம்பெற்றுள்ளன. மேலும் தொல்காப்பியர் அழகியல் குறித்து எட்டு வகையான மெய்ப்பாடுகளையும் குறிப்பிடுகின்றார். அவை,

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப"**

என வரும் நூற்பாவின் வழி அறியமுடிகின்றது.

**சங்க இலக்கியங்களில் அழகியல்**

**"காதல் நெஞ்சின் கனிந்த விளக்கம் - அகம்**
**வீர நெஞ்சின் விரிந்த விளக்கம் - புறம்"**

தமிழ் இலக்கியங்களுள் காலத்தால் முற்பட்டது சங்க இலக்கியம். சங்க இலக்கியத்தில் காணலாகும் உள்ளடக்கம் மற்றும் உருவம் சார்ந்த அழகியல் கூறுகள் இலக்கியத்திற்கு மெருகூட்டுவதாக அமைகின்றன.

**அன்பின் வழி அழகியல்**

அன்பு என்பது ஒரு வகை மெய்ப்பாடு. மெய்ப்பாடு என்பது உள்ளத்துணர்வை புறத்தே வெளிப்படுத்துவது. தொல்காப்பியர் எண் வகை மெய்ப்பர்டுகளோடு மேலும் முப்பது வகையான மெய்ப்பாடுகளைக் குறிப்பிடுகிறார். அவற்றுள் அன்பு என்பதும் ஒன்று. குறுந்தொகையில் அகப்பாடல்களுக்கெல்லாம் அணியாய் விளங்குகின்ற பாடல் ஒன்று அன்பின் மகத்துவத்தை அற்புதமாக வெளிப்படுத்துகிறது.

**"யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறை கேளீர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"** **(குறுந்., பா. 40)**

மழை நீரானது செம்புலத்தில் படுகின்ற போது அதன் தன்மையைப் பெறுவது போல இரண்டு நெஞ்சங்களும் ஒன்றாகிவிட்டன என்ற புனிதமான உயரிய அன்பு சங்க இலக்கியத்தில் பேசப்படுகின்றது.

**இயற்கை அழகியல்**

சங்கப் புலவர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்க்கை நடத்தினர். இயற்கையே இறைவன் எனக் கண்டு போற்றினர். இவ்வாறு சங்ககால மக்கள் வாழ்வில் இடம் பெற்ற இயற்கை, அக்காலத்தில் தோன்றிய இலக்கியத்திலும் இடம் பெறுகிறது.

கவிஞன் நீரோடைகளில் கரிய நிறமுடைய நெய்தல் மலர்கள் நிறைந்திருப்பதைக் காணுகின்றான். கரிய மேகம் வானத்தில் எழும் தோற்றத்தையும் காணுகின்றான். அக்கவிஞனுக்கு மேகங்களின் நிறம், நெய்தல் மலர் போன்ற நீலநிறமாகக் காட்சியளிக்கிறது. இதனை,

**"மைபடு மலர்க்கழி மலர்ந்த நெய்தல் இதழ்**
**வனப்புற்ற தோற்றமொடு உயர்ந்த மழை"** **(பதிற்று., 54 : 16)**

என்று கவிஞன் தான் கண்ட காட்சியை இயற்கை அழகாகச் சித்திரிக்கின்றான்.

**பத்துப்பாட்டில் ஆற்றுப்படை இலக்கியங்கள் வழி அழகியல்**

பத்துப்பாட்டு ஒரு பண்பாட்டுச் சுரங்கம், வரலாற்றுப் பெட்டகம், கலைகளின் இருப்பிடம், தமிழர் வாழ்க்கையைக் காட்டும் ஓவியம், இதனை,

**"பத்துப்பாட்டாதி மனம் பற்றினார் பற்றுவரோ**
**எத்துணையும் பொருட்டு இயையும் இலக்கணமில்**
**கற்பனையே"** [4]

என மனோன்மணியம் சுந்தரனார் பாராட்டுவார்.

**திருமுருகாற்றுப்படையில் அழகியல்**

திருமுருகாற்றுப் படையில் 'அருவியின் அழகு' குறித்த பாடல் ஒன்று அழகியலை எடுத்தியம்புவதாகக் காட்சியளிக்கின்றது. இதனை,

**"தண்கமழ் அலர் இறால் சிதைய நன்பல**
**ஆசினி முதுசுளை கலாவ மீமிசை**
**நாக நறுமலர் உதிர யூகமொடு**
**மாமுக முசுதலை பனிப்பப் பூநுதல்**
**இரும்பிடி குளிர்ப்ப வீசிப்………" (திருமுருகு., 301-304)**

என்ற பாடல் வரிகள் பழமுதிர்ச்சோலையில் அருவி வீழ்கின்ற அழகை எடுத்தியம்புகின்றது.

**பெரும்பாணாற்றுப்படையில் அழகியல்**

சங்க கால மக்கள் முற்றிய கரும்புகளை வெட்டி எடுத்து வந்து கரும்பு ஆலைகளில் இட்டு சாறு எடுப்பர். சாற்றைக் காய்ச்சி கட்டியாகச் செய்வர். இந்த ஆலைகளின் ஓசை யானையின் பிளிறலைப் போல இருப்பதை,

**"எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை**
**விசயம் அடுவம் புகைசூழ் ஆலைதொறும்**
**கரும்பின் தீம்சாறு விரும்பினர் மிசையின்" (பெரும்பாண், 260-262)**

என்ற பெரும்பாணாற்றுப்படை அடிகள் உணர்த்துகின்றன. இதன் மூலம் விலங்குகளின் ஒலி அழகியலை அறியமுடிகின்றது.

**பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அழகியல்**

இலக்கிய அழகின் மையம் மனிதன் தான் கண்டவற்றை மொழி வழி காட்சிப்படுத்தி உணர வைப்பது அழகு. தன்னுணர்ச்சி வெளிப்பாடாக இருக்கும் அழகியல், கவர்ச்சி, விருப்பம், நிறைவு, உண்மை, எதார்த்தம், எதிர்பார்ப்பு என்ற எல்லா நிலைகளிலும் படிப்பவனைத் தன் உணர்ச்சிக்கு இணையாக்குகின்றது.

மக்களின் புற அழகினை இலக்கியங்கள் வருணிப்பது போல், அவர்களின் பண்பழகையும் ஆன்றோர்கள் போற்றியுள்ளனர் என்பதை பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் வழி அறியமுடிகின்றது. எடுத்துக்காட்டாக, ஆடவர் வெற்றி பெற்று வரும் அழகை,

**"வாய்மையுடைமை வனப்பாகும்" (திரிகடுகம், 78 - 2)**

**"கண் வனப்புக் கண்ணோட்டம்**
**கால் வனப்புச் செல்லாமை" (சிறுபஞ்சமூலம், 7)**

**"மாண்டமைந் தாராய்ந்த மதி வனப்பே" (ஏலாதி, 26)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. இவற்றை நோக்கும் போது அழகுணர்ச்சி மக்களிடம் இயல்பாக அமைந்துள்ள விதம் புலனாகின்றது.

**முடிவுரை**

- அழகு மனிதர்களின் புலனுணர்வோடு தொடர்புடையது. அழகுக்கும் மனித மனத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. அழகை பற்றிய சிந்தனை மட்டுமெ ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மாறுபடுகிறது. அதனடிப்படையில் இவ்வியலில் கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்துக் கூறுகையில் அழகு என்பது பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அபூர்வமாக மலரும் குறிஞ்சி மலர்க் காட்சி போன்ற அருமையான அழகியல் காட்சிகளை நம் கண் முன்னே நிறுத்துகிறது.
- அழகியலின் இயல்புகளை ஆராய்ந்து அறிந்து கூறப்படும் பண்புகளைக் கற்க அழகியல் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.
- தமிழர்கள் அழகினை வெவ்வேறு சொற்களால் அழைத்து மகிழ்ந்தனர் என்பதற்கு நிகண்டுகளும் அகராதிகளும் தரும் விளக்கங்களே சான்றாதாரமாக அமைகின்றன.
- தமிழர்கள் அழகியலையும் கலைகளின் எழிலையும் தன்னுள் ஈர்த்துக் கொண்டு அதனை வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்ற இலக்கியக் கலையில் தமிழர் பதித்த தேன் துளிகளாம் அழகியல் கூறுகளின் இன்றியமையாமை புலனாகின்றது.
- அழகயில் திறனாய்வு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. அழகியல் திறனாய்வு ஒரு இயக்கமாகவே வளர்ந்து கொண்டிருப்பதை இலக்கியத் திறனாய்வு, மார்க்சீயத் திறனாய்வு, ரசனை முறைத் திறனாய்வு ஆகியன உணர்த்தி நிற்கின்றன.

**பார்வை நூல்கள்**


1. அழகியல் சிந்தனைகள், வி.சி.சசிவல்லி, ப. 3
2. இலக்கியக்கலை, அ.ச.ஞானசம்பந்தன், ப. 126
3. பத்துப்பாட்டு, கோவிலூர் மடாலயப் பதிப்பு, முன்னுரை, ப. 14

# வாழ்வியல் பரிமாணங்கள்

*முனைவர் போ.கார்த்திகா, கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, காமராசர் அரசுகலைக் கல்லூரி, சுரண்டை.

**முன்னுரை**

மனிதனுடைய வாழ்க்கை பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு நிலைகளைத் தாண்டி பயணப்பட்ட தன்மையைக் காணமுடிகின்றது. மனிதன் நாகரீக வளர்ச்சி அடையப் பல போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன. குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற பரிணாம வளர்ச்சி டார்வின் கொள்கை என்று சுட்டப்படுகின்றது. ராகுல சாங்கிருத்தியாயன் அவர்கள் எழுதிய 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூல் மனிதர்களின் வாழ்வியல் பரிணாமங்களைக் குறித்து மிக அழகாகச் சித்திரித்துக் காட்டுகின்றது. அச்செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

**இனக்குழு சமூகம்**

ஆரம்ப காலகட்டங்களில் மனிதர்கள் குடும்பம் என்ற அமைப்பிலோ அல்லது சமூகம் என்ற அமைப்பிலோ வாழ்ந்த தன்மை காணப்படவில்லை. குழு வாழ்க்கை முறையே இருந்திருக்கின்றது. மனிதன் வாழ்ந்த ஆரம்ப காலத்தில் 'ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன்' என்ற தாரக மந்திரம் அறியப்படாத காலகட்டம் ஆகும். அக்காலத்தில் மனிதன் ஒரு தாயின் கட்டுப்பாட்டில் குழு வாழ்க்கை வாழ்ந்து வந்தான். தாய் தான் குழுவின் தலைவியாக அமைந்திருந்தார். தாய் தனது குழந்தைகள், பேரன், பேத்தி என வாரிசுகளைக் கொண்ட ஒரு குழுவை அமைத்துக் கொண்டார். அக்குழுவானது தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொண்டனர். உணவு சேகரிப்பவர்கள், விலங்குகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துப் கொள்பவர்கள் என குழு உறுப்பினர்களே தங்களது தேவைகளை நிறைவேற்றுபவர்களாக இருந்தனர். இவர்களே இனக்குழு சமுதாயத்தினர் என அழைக்கப்பட்டனர்.

**நாடோடி வாழ்க்கை**

இனக்குழு சமூகத்தில் வாழ்ந்த மனிதர்கள் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டார்கள். நாகரீகம் பெருகிய பொழுது கூடாரங்கள் அமைத்தும் வீடுகள் கட்டியும் வாழ முற்பட்டனர். ஆனால் ஆதிகால மனிதர்கள் நாடோடி வாழ்க்கையையே விரும்பியவர்களாகக் காணப்பட்டனர். ஒரே இடத்தில் தங்கி வாழ்வது என்பது பூமாதேவியை அசுத்தப்படுத்துவதற்குச் சமம் என எண்ணினர். விளைநிலங்களின் காரணமாக மக்கள் நிலைத்த வாழ்க்கையை ஏற்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாயினர்.

**போரின் தொடக்கம்**

ஒரு தாயின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஒரு குழுவும் மற்றொரு தாயின் கட்டுப்பாட்டில் இருக்கும் மற்றொரு குழுவும் தங்களுக்குள் நிலத்திற்காகவும் உணவிற்காகவும் சண்டையிட்டுக் கொண்டனர். குழுக்கள் பெருகும் பொழுது தங்களது இருப்பினை நிலைநிறுத்திக் கொள்வதற்காகப் போர்கள் செய்யத் தொடங்கினர். இதற்குக் கற்களால் ஆகிய ஆயுதங்களையே தொடக்கத்தில் பயன்படுத்தினர். அதன் வளர்ச்சி நிலையாக உலோக ஆயுதங்களையும் பயன்படுத்தத் தொடங்கினர். முதன்முதலில் தாமிர ஆயுதங்கள் தோன்றின. கல், எலும்பு, கொம்பு, மரம் ஆகிய கருவிகளைப் பயன்படுத்திய மக்கள் தாமிரம், செம்பு போன்ற உலோகத்தால் செய்யப்பட்ட கருவிகளைப் பயன்படுத்தினர்.

**புழங்கு பொருட்கள்**

நாடோடிகளாக வாழ்ந்த மக்கள் ஆங்காங்கே கூடாரங்கள் அமைத்துத் தங்கி வந்தனர். அவர்களது புழங்கு பொருட்கள் இயற்கையில் கிடைக்கும் கல், மரம், இலைதழைகள், விலங்குகளின் எலும்புகள், கொம்புகள் ஆகியவற்றால் உருவாக்கப்பட்டிருந்தன. ஆனால் மனிதன் ஓர் இடத்தில் நிலைத்துத் தங்கிய பொழுது உலோகங்களால் ஆகிய புழங்கு பொருட்களைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

அதிலும் குறிப்பாக தாமிரம் அதிகளவில் புழக்கத்தில் இருந்தது. அக்காலகட்டத்தில் மக்கள் அம்மை நோயினால் மிகுதியாகப் பாதிக்கப்பட்டனர். ஆகப் புதிதாக வந்த ஒரு

நோய்க்குத் தாங்கள் பயன்படுத்திய உலோகப் பொருட்களே காரணம் என எண்ணத் தொடங்கினர். நாளடைவில் நவீனத்தை மக்கள் மத்தியில் புகுத்திய தன்மையையும் அறிய முடிகின்றது.

**விவசாயம்**

மக்கள் நாடோடிகளாக வாழ்ந்த காலத்தில் காடுகளில் கிடைக்கும் காய், கனி போன்றவற்றை உணவாக உட்கொண்டனர். அதனுடன் காட்டு விலங்குகளின் மாமிசங்களையும் தங்கள் உணவிற்குப் பயன்படுத்தினர். நாகரீகமும் மக்களின் அறிவும் வளர்ச்சி அடையும் பொழுது தங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்ள இயலும் என்ற நிலை உருவானது. அதுவே விவசாயமாக உருவெடுத்தது. தொடக்கக் காலத்தில் ஏர்க்கலப்பை போன்ற சிறிய விவசாயக் கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

ஆனால் அதற்கு அதிக அளவிலான எதிர்ப்பு எழுந்தது. விவசாயம் என்பது பூமித்தாயின் வயிற்றைக் கிழிப்பதற்குச் சமம் என்று கூறி அதனை எதிர்த்தனர்.

**இந்திரன்**

இன்று வரை இந்திரன் என்பவன் தேவர்களுக்குத் தலைவன் என்று சுட்டி வருகின்றோம். காப்பிய காலகட்டம் வரை இந்திரனுக்கு இருபது நாட்கள் வரை விழா எடுத்த தன்மை சுட்டப்படுகின்றது. பிற்காலப் புராணங்களின் வரவு இந்திரனைக் கடவுள் நிலையில் இருந்து தாழ்த்தியது.

எல்லாக் கடவுளர்களும் மனிதர்களால் உருவகிக்கப்பட்டவர்களே ஆவர். அந்த வகையில் இந்திரன் என்பது ஒரு காலகட்டத்தில் ஒரு பதவியின் பெயராக இருந்தது. புராணங்களிலேயே 100 அசுவமேத யாகங்களைத் திறம்படச் செய்பவர்க்கு இந்திரப்பதவி கிட்டும் என்ற செய்தி காணப்படுகின்றது. தொடக்க காலகட்டங்களில் படைகளுக்குத் தலைமை வகிப்பவர்களைப் புருகூதன் என்ற பெயரால் அழைத்தனர். அந்தப் புருகூதன் பிற்காலத்தில் இந்திரன் என்று அழைக்கப்பட்டான்.

**யாகங்கள் - வேள்விகள்**

விசுவாமித்திரர் வசிட்டர் போன்ற ரிஷிகளால் வேதங்கள் உருவாக்கப்பட்டன. வேதங்கள் தேவர்களுக்கான அவிர்பாகம் அளிக்கும் நிலையில் எழுந்தவை ஆகும். தொடக்க காலத்தில் வேள்விகள் நடந்த விதம் விநோதமான தன்மை உடையது. வேள்வியில் யாகப்பசு அல்லது யாகக்குதிரைகள் பலியிட்டனர். அவற்றையே பிரசாதமாகவும் உட்கொண்டனர்.

பிற மதங்களின் வரவால் உயிர்கள் மீது அன்பு செலுத்துதல் வேண்டும் என்ற கருத்து மக்களிடையே பரவத் தொடங்கியது. ஆதலால் யாகங்கள், வேள்விகள் செய்து வந்த மதங்களும் தங்கள் சடங்கு முறைகளில் உயிர்பலியிடுவதனைத் தவிர்த்தனர். அஸ்வமேத யாகம், இராசசூய யாகம் போன்ற யாகங்கள் பிற்காலகட்டத்தில் வழக்கொழிந்து போயின.

**அசுரர்கள் சிறப்பு**

தமிழர்கள் வாழ்ந்த பகுதியில் இருந்த ஒரு குறிப்பிட்ட இனக்குழுவினர் அசுரர்கள் என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். அசுரப் பிரிவைச் சார்ந்தவர்கள் கலைகளிலும், வீரத்திலும் சிறந்தவர்களாகத் திகழ்ந்தனர். தங்களது அரண்மனைகளைப் பலமான கோட்டைகள் கொண்டு பாதுகாத்தனர். இனக்குழுக்களுக்கு இடையேயான போரில் கவசங்களையும், தேர்களையும் பயன்படுத்தினர். நகர அமைப்பு மிகச் சிறப்பான முறையில் அமைக்கப்பெற்றிருந்தது. கடைவீதிகள் படித்துறைகள், தாமரைக்குளங்கள், தடாகங்கள் என மிக நுட்பமான வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டிருந்தன.

வீடுகளும் சாத்திர முறைப்படி சரியாக அமைக்கப்பட்டிருந்தது. தனித்தனி அறைகளுடன் வீடுகள் கட்டப்பட்டிருந்தன. புகைப்போக்கியுடன் கூடிய சமையலறைகள் வீட்டின் பின்புறம் கிணறுகள் என தேவைகளின் அடிப்படையில் கட்டிடக்கலை நுணுக்கங்களுடன் வீடுகள் கட்டப்பட்டிருந்தன. பல அடுக்குமாடிகளைக் கொண்ட மாடி வீடுகள் கட்டப்பட்டன.

**எழுத்து வடிவம்**

போர்ச் சமயங்களிலும் பிற முக்கிய நிகழ்வுகளின் போதும் தூது செய்திகளைப் பகிர்ந்து கொள்வதற்கு எழுத்து வடிவங்களைப் பயன்படுத்தினர். அசுர இனக்குழு மக்களின் எழுத்து வடிவங்கள் பகைவர்களுக்குப் புலப்படாத தன்மை காரணமாகப் பல்வேறு போர்களில் அசுரர்கள் வெற்றிப் பெற்றனர். ஆனால், அசுரர்களின் இந்த முறையினை அறிந்த பகைவர்கள் தாங்களும் தங்களுக்கான எழுத்து வடிவங்களை உருவாக்கிக் கொண்டனர்.

**அசுரர் ஆரியர் இணைவு**

அசுரர்கள் மிகப்பெரும் நிலப்பரப்பினையும் தங்களுடையதாகக் கொண்டிருந்த காரணத்தினால் அதற்குப் பல இனக்குழுவினரும் எதிர்த்துப் போரிட்டனர். அத்தகைய இனக்குழுக்களின் ஒன்று ஆரியர்களின் இனக்குழு ஆகும். ஆரியர்கள் அசுரர்களை அழித்து அங்கு தங்களது அரசாட்சியை நிலைநிறுத்த எண்ணினர். ஆகவே, ஆரியர்களுக்கும் அசுரர்களுக்குமிடையே அதிக அளவிலான போர்கள் நடைபெற்றன.

அப்போர்களில் அசுரர்கள் வலிமை வாய்ந்தவர்களாக இருந்தபோதிலும் ஆரியர்கள் மதிநுட்பம் வாய்ந்தவர்களாக இருந்தனர். மேலும், அசுரர்கள் கவசம், தேர் முதலியவைகளைக் கொண்டு போரிட்டபோதிலும், போருக்குக் காளைகளையே பயன்படுத்தினர். ஆனால் ஆரியர்கள் போரில் குதிரைகளைப் பயன்படுத்தினர். குதிரைகளின் விரைவுத்தன்மையினை அசுர படையால் ஈடுகட்ட இயலவில்லை. ஆதலால் அசுரர்களுக்கு போரில் பின்னடைவு ஏற்படத் தொடங்கியது.

**உருவத்தோற்றம்**

ஒவ்வொருவரின் உருவத்தோற்றமும் அவரவர்கள் இருக்கக் கூடிய பருவகாலச்சூழலை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கின்றது. அந்த வகையில் அசுரர்கள் கருப்பான தோற்றத்துடனும் சிறிதளவு சிவந்த தலைமுடியை உடையவர்களாகவும் தோற்றமளித்தனர். ஆனால் ஆரியர்கள் சிவந்த நிறத்துடனும் நீலநிறக் கண்களுடனும் காட்சியளித்தனர். பிற்காலகட்டங்களில் அசுரர்களின் நிலப்பகுதியில் பெரும்பகுதியை ஆரியர்கள் கைப்பற்றியவுடன் அசுரர்களின் தோற்றத்தினை இழிவாகக் கருதினர். அசுரர்களின் வருணனைகளையும் இழிவுபடுத்தும் தன்மையிலேயே சித்திரித்தனர். ஆரியர்கள் அழகானவர்கள் என்றும் அசுரர்கள் அசுத்தமானாவர்கள் என்றும் கருத்துக்களைப் பரவச் செய்தனர். ஆனால் காலங்கள் செல்லச் செல்ல ஆரியர் அசுரரிடையே கலப்பு இனங்கள் தோன்றத் தொடங்கின.

**வருணப்பாகுபாடு**

தொடக்க காலத்தில் மக்கள் எவ்விதப் பாகுபாடுகளும் இன்றி ஒற்றுமையுடன் காணப்பட்ட நிலையே நிலவிவந்தது. ஆனால் அசுரர்களிடையே ஆரம்பத்தில் தலைவன் அடிமைகள் என்ற பகுப்பு தோன்றத்தொடங்கியது. ஒரு தலைவனுக்குக் கீழ் ஏவல் செய்யக் கூடிய தன்மையில் பலர் இருந்தனர். ஆயினும் வருணபேதம் என்ற நிலை உருவாகவில்லை. ஆரியர்களின் வருகை இந்த நிலையை மாற்றி அமைத்தது. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகை வருணங்கள் தோன்றின.

இவற்றுள் அந்தணர் என்பவர்கள் வேள்விகள் இயற்றி நெருப்பைப் பாதுகாப்பவர்கள் ஆவர். தொடக்க காலத்தில் மனிதன் நெருப்பின் அவசியத்தை உணர்ந்து அதனைப் பாதுகாப்பதற்கென அந்தணர்கள் நியமிக்கப்பட்டனர். இதனையே வேள்வி இயற்றல் என்ற பெயரில் அழைத்தனர். அவர்கள் தங்களைச் சமூகத்தில் உயர்ந்த இடத்தில் நிலைநிறுத்திக் கொண்டனர்.

இனக்குழு சமூகத்தில் வீரமிக்கவனாகத் தனது குழுவினைப் பாதுகாக்கும் ஆண்மகனையே தலைவனாக ஏற்றுக் கொண்டனர். ஆனால் பிற்காலத்தில் அவர்கள் அரசன் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டு வாரிசு அரசாட்சி தோற்றம் பெற்றது. சிலவேளைகளில் இதனை எதிர்த்தும் போரிட்ட நிலையைக் காணமுடிகின்றது.

தொழில் அடிப்படையில் உயர்ந்தவர்களாக இருந்தவர்கள் வணிகர்கள் என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். வணிகர்களின் வருமானமும் அவர்கள் கட்டக்கூடிய வரியும் அரசுக்கு இன்றியமையாத தன்மையில் இருந்ததால் வணிகர்கள் செல்வந்தர்களாகவும் மதிப்புடையவர்களாகவும் கருதப்பட்டனர்.

இத்தொழில்கள் ஒழிந்து சாதாரண வேலைப்பாடுகள் செய்பவர்களும் மேலே குறிப்பிட்ட மூன்று வருணத்தினருக்கும் அடிமைத்தொழில் செய்பவர்களும் நாலாவது வருணமாகிய வேளாளர் சமூத்தினர் என அழைக்கப்பட்டனர். இவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் என்று சமூகத்தால் ஒதுக்கப்பட்ட நிலையே காணமுடிகின்றது.

காலமாற்றத்தால் நால்வருணப் பாகுபாடுகளில் சிறுசிறு மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும் முற்றிலுமாக இப்பாகுபாட்டினைச் சமூகத்தில் இருந்து அகற்றமுடியவில்லை.

**முடிவுரை**

நாடோடிகளாகவும் தாய்வழிச் சமூகத்தினராகவும் இருந்த மக்கள் நிலைத்த வாழ்க்கை வாழத் தொடங்கியதும் தந்தை வழிச் சமூக அமைப்பிற்கு மாறினர். ஆண்கள் ஒரு பெண் தனக்கானவளாக மட்டுமே இருக்க வேண்டும் என்று எண்ணத் தொடங்கியவுடன் பெண்கள் வீடுகளுக்குள் அடைக்கப்பட்டனர். உணவு தேடுதல் முதற்கொண்டு வெளிவேலைகள் அனைத்தும் ஆண்கள் கைகளுக்கு மாறின. உடல் அளவில் பெண்களுக்குச் சில பலவீனம் அவர்களை முழுமையான ஆண்களுக்குக் கீழ் வாழக்கூடிய ஒரு சமூகச்சூழலை உருவாக்கியது.

அதே போல் இனக்குழு சமூகமுறை முற்றிலுமாக மாற்றம் அடைந்தது. ஆனால் நிலத்திற்கும் உணவிற்குமான போராட்டம் எக்காலத்திலும் மாறுபாடு அடையவில்லை. அசுரர்கள் என்ற இனம் அரக்கர்கள் என்று சித்திரிக்கப்பட்டனர். ஆரியர்கள் உயர்ந்தவர்கள் என்று புராணங்கள் வழி நிலைநிறுத்தினர். அறிவு முதிர்ச்சி பெற்ற இக்கால கட்டத்திலும் இவற்றைச் சிறிதும் மாற்ற இயலாத நிலையே காணப்படுகின்றது.

இங்ஙனம் மக்கள், வாழ்வில் பல்வேறு பரிமாணங்களை அடைந்து வந்துள்ளனர். இன்னும் பல்வேறு படிநிலைகளைத் தாண்டிச் செல்லக் கூடிய நிலையும் இருந்துவருகின்றது.